## கால ஆய்வில் சிக்கித் தவிக்கும்

# மாணிக்கவாசக சுவாமிகள்



தனபாக்கியம் குணபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால ஆய்வில் சிக்கித்தவிக்கும் மாணிக்கவாசகர் சுவாமிகள்

*தனபாக்கியம் குணபாலசிங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் விற்பனை நிதியானது வடக்கு கிழக்கில் வாழும் நலிவடைந்த மக்களின் சமூக மேம்பாட்டிற்காக பயன்படுத்-தப்படும்.


| | | |
|---|---|---|
| நூல் | : | கால ஆய்வில் சிக்கித் தவிக்கும் மாணிக்கவாசகர் சுவாமிகள் |
| பதிப்பு | : | பங்குனி - 2013 |
| ஆசிரியர் | : | தனபாக்கியம் குணபாலசிங்கம். |
| உரிமை | : | ஆசிரியரிற்கு |
| பதிப்பகம் | : | கரிகணன் பிறைவேட் லிமிட்டெட், 681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : | 64 |
| விலை | : | ரூபா 300.00 |
| ISBN | : | 978 - 955 -44186-0-8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் முன்னுரை

**எ**ழுத்தாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சனைகள் பல. அவற்றில் எவரும் சந்தித்து இருக்க முடியாததொன்றினை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். நான் படிக்கும் காலத்தில் தமிழ், வடமொழி நூல்களை வாங்குவதில் அதிக ஈடுபாடுடையவளாக இருந்தேன். பின் சென்னையிற் படித்துக் கொண்டிருந்த காலத்திலும், பூர்வீக வரலாறுகள், மற்றும் தொல்லியல் ஆய்வுகள் தொடர்பான நூல்களை வாங்கிப் படிப்பதிலும் அதிக அக்கறையுடையவளாக இருந்தேன். பின்னர் என் எழுத்துத்துறைக்கு நங்கூரம் போட்டவரான பௌதிகவியற்றுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியரான காலம்சென்ற ஆ. வி. மயில்வாகனம், தான் சேகரித்து வைத்திருந்த அனைத்துச் சைவசித்தாந்த நூல்களையும் எனக்கு அன்பளிப்புச் செய்திருந்தார். அதேபோல் என் மாமனார் ஏ தில்லையம்பலமும் தன் நூற்சேமிப்புக்களை எனக்கு அன்பளிப்புச் செய்தார். இவ்வாறு என் எழுத்திற்கு வேண்டிய நூல்களிற் பெரும்பாலானவை என் கைவசமே இருந்தன. ஆனால், அவைமுற்றாக என் கையைவிட்டகன்றுபோன சோகக்கதை ஒன்றுமுண்டு.

நாம் ஈழத்தில் தொடர்ந்து நடைபெற்றிருந்த தமிழ்-சிங்கள இனப் போராட்டத்திற் பல தடவைகள் புலப்பெயர்வுகளைச் செய்ய நிர்ப்பந்திக் கப்பட்டோம். 1990இல் இடம்பெற்ற சிங்கள இராணுவப்படையெடுப்பின்பொழுது நாம் ஏறாவூரில் வாழ்ந்திருந்தோம். அப்பொழுது சிங்கள இராணுவத்தினர் எமது பொருட்களைச் சூறையாடியிருந்தாலும், என் நூற்றேட்டங்களைச் சோதனையிட்டபின் வீசிவிட்டே சென்றிருந்தார்கள். நிலைமைகள் சிறிது சுமுகமாகியபொழுது நான் தனியாக அங்கு நான்கு வருடங்கள் வாழ்ந்திருந்தேன். என் கணவரும், மகளும் லண்டனுக்குச் சென்ற நிலையில், நான் மீண்டும் என் நூல்களுடனே என் பொழுதினைக் கழித்திருந்தேன். இக்காலத்திலேதான் நான் இரு ஆய்வுக் கட்டுரைகளை எழுதிக் கொழும்புத் தமிழ்ச்சங்கத்திற்கு அனுப்பியிருந்தேன். அதனோடு 'மட்டக்களப்பு மான்மியம்' (ஓர் ஆராய்ச்சி) எனும் நூலும் இக்காலத்திலேதான் எழுதிவெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், நான் லண்டனுக்கு 1997ஆம் ஆண்டு புலம்பெயர்கையில், ஏறாவூர் பிள்ளையார் கோவிலின் பூசகராகச் சேர்ந்த வந்தாறு மூலை ஐயர் பையனுக்குத் தங்குவதற்கு இடமில்லையென்பதால், வீட்டினைப் பாவிக்கக்கொடுத்துவிட்டு வந்தேன். இவருக்கு உதவியாக வேலாயுதம் மகன் ரவியும் (வர்த்தகர்) அங்கு தங்க அனுமதித்திருந்தேன். இந்த உதவிக்குக் கிடைத்த பலன்; நான் 2011ஆம் ஆண்டு இந்நூல்களை மட்டக்களப்புப் பொது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யும் திட்டத்திற் போயிருந்தேன். ஆனால், என் நூல்கள் அத்தனையும் சூறையாடப்பட்டிருந்தன. ஒரு நூல்நிலையத்திற் பலருக்கும் பயன்படவேண்டிய நூல்கள் குரங்கின் கையிற் பூமாலை போலாகிவிட்ருந்தன. ஆனால், மாணிக்கசுவாமிகள் பற்றிய காலஆய்வுகள் தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட என் கையெழுத்துப் பிரதிகள் கைவிடப்பட்டிருந்தன. எஞ்சிய சில நூல்களைப் பொது நூலகத்திற்குக் கையளித்திருந்தேன். எனவே, இந்த முதுமைப்பருவத்தில் எழுதுவதற்கும், என் நூல்களைச் சூறையாடிவிட்டு, கைப்பிரதிகளை விட்டு எழுத்துப்பணியினைத் தொடர உதவி செய்தமைக்காக அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, மாணிக்கவாசகர் காலஆய்விற்கு முன் கட்டியம் கூறுவதுபோற் பழங்காலமனிதனின் குகை ஓவியங்கள் தரும் வரலாற்றுப் பதிவுகள் கூறப்பட்டுள்ளது. ஏனெனில், மனிதன் எழுத்துக்குறியீடுகளை உருவாக்க முடியாத நிலையிலும் வரலாற்றுணர்வுடன் தொழிற்பட்டிருந்தான். அதனாலே, பாதுகாப்பான குகையின் உட்பகுதிகளிலே தன் சிந்தனைகளை வரைந்து காலத்தை வென்றிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்த கட்டியமாகத் தமிழினம் எழுத்துக்குறியீடுகள்மூலம் தொல்காப்பியம் எனும் இலக்கண நூலையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான இலக்கிய நூல்களையும், இயற்றிய அறிவுசார் சமூகமாக வளர்ந்திருந்த பொழுதும், தம்மையோ அல்லது தம்மினத்தின் வரலாற்றினையோ தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லும் வகையில் தொழிற்பட்டிருக்கவில்லை. உலகின் வேறெந்த மனிதசமூகமும் சிந்தித்திருக்காத வகையில் திருக்குறளையாத்த திருவள்ளுவர்கூட, தம்காலத்தைய அரசியல், சமூகப் பின்னணிகள் பற்றியோ, அல்லது தன்காலத்தைய அறிவுசார் சமூகத்தினர் பற்றியோ எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை. இருப்பினும் தொல்காப்பியம் மூன்றாம்சங்கத்தின் முதல்மன்னனான "நிலந்தருதிருவிற் பாண்டியன்" எனும் சிறப்புப் பெயரை ஈட்டிக்கொண்ட முடத்திருமாறன் சபையில் அரங்கேற்றப்பட்டதாக, இந்நூலிற்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய, இவர் மாணவன் குறிப்பிடுவார். அதனோடு அதங்கோட்டாசிரியர் தலைமையில் அரங்கேற்றப்பட்டதென்ற செய்தியும், இவரது காலத்தினையும், நூல்கள் அரங்கேற்ற விழாக்களில் மன்னருக்கும், அறிஞர்களுக்கும் இருந்த ஈடுபாடுபுலனாம். மேலும், 'முந்துநூல் கண்டு' என்ற குறிப்பும் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொன்மையைக் காலவறையறைக்கப்பால் எடுத்து உணர்த்திநிற்கின்றது. திருவள்ளுவர் பற்றி நாம் அறிவதெல்லாம் இவர் தமிழ்கெழுகூடல் உறுப்பினரல்லர் ஆயினும், அவரது பெருமைமிக்க நூல் மூன்றாம் சங்கத்தின் இறுதி மன்னனான உக்கிரப்பெருவழுதியின் அரசசபையில் அரங்கேற்றப்பட்டதென்பதாகும். ஆனால், இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையை, சங்ககால ஒளவையார், இடைக்காடர், மற்றும் மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியன குறிப்பிடுவதனால் வள்ளுவரின் காலம் உறுதியாகின்றது. ஆனால், நூலாசிரியர்கள் தம்கால அரசுகள் பற்றியும், தம்மை அடையாளப்படுத்துதல் பற்றியும் அக்கறைகாட்டாமை வரலாற்றுத் தவறாகும்.

இனி, ஒரே பெயரில் வெவ்வேறு புலவர்கள் இலக்கியங்களையாக்கும் நிலையிலும், இவர்களை அடையாளம் காண்பதில் பெரும் குழப்பமான நிலையினையே அவதானிக்கமுடிகின்றது. மாணிக்கவாசகரோ ஒருவர். அவர் குறிப்பிட்ட "வரகுணன்" எனும் பாண்டியனின் பெயரே அவரது காலத்தினை அறிவதிற் குழப்பத்தினை ஏற்படுத்தியிருந்தது. எனவே, நாம் அவரது நூலின் அகச்சான்றுகள் கொண்டே மாணிக்கவாசகர் காலத்தினை ஆராய்ந்துள்ளோம். எனவே, எழுத்தாளர்கள் தம்மையும், தம்சமூகத்தினையும் கால அடிப்படையில் அடையாளப்படுத்தவேண்டிய அவசியத்தினை உணர்வர் எனில் மிகையாகாது.

இந்நூலின் விரைவான வெளியீட்டிற்காக உழைத்த அனைவருக்கும், நூற்பணியில் ஈடுபட்ட எழுத்தாளர் யோ. புரட்சிக்கும் (வள்ளுவபுரம்) எனது நன்றிகள்.

தனபாக்கியம்- குணபாலசிங்கம்

10- 3 - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

**ஆ**தியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" என்றுணர்ந்து

**"தென்னாடுடைய சிவனேபோற்றி**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

என உச்சியிற் கூப்பிய கையராய் உலவிய மணிவாசகர் இறைவனோடு இரண்டறக்கலந்து உருகிப்பாடிய திருவாசகத்தின் பெருமையை நினைவுகூரும் வகையில், அவர் பிறந்த ஊரான வாதவூரையே அவருக்குப் பெயர் சூட்டித் "திருவாதவூரர்" எனச் சைவஉலகம் பாராட்டிப் போற்றியிருந்தது.

அத்தகைய மாணிக்கவாசகர் வாழ்ந்த காலத்தை வரையறை செய்யமுடியாத நிலையில் ஆய்வாளர்கள் ஒரு நூற்றாண்டு காலமாக இவ்வாய்வில் ஈடுபட்டு வருகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். இந்நிலையில் இவ்வாய்வில் தூண்டப் பட்டவரான தனபாக்கியம் குணபாலசிங்கம் அவர்கள் திருவாசகத்திலிருந்தும், திருக்கோவையாரிலிருந்தும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் எடுத்தாண்ட திருவாசக வரிகளைச் சான்றாக எடுத்துக்காட்டி; தேவார முதலிகளுக்கு முற்பட்டவர் திருவாதவூரர் என்பதை நிறுவியுள்ளார்.

"நரியைக் குதிரை செய்வானும்" (திருமுறை 4 திருவாரூர் ப்பதிகம் - **42**" போன்று அப்பர், சம்பந்தர், சுந்தரரும் திருவாசகத்தை அடியொற்றிப் பாடியுள்ளமையை அம்மையார் சான்றாதாரமாக உள்ளே குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கல்லாடத்திலும் திருக்கோவையார் பற்றிய ஆய்வுகளைக் குறிப்பிட்டுள்ளமை அவருடைய ஆழ்ந்த ஆய்வுத் திறனைப் புலப்படுத்துகின்றது.

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்கம் அவர்களுடைய இவ்வாய்வுநூலை அறிஞர்கள் போற்றிப்பாராட்டுவது மட்டுமன்றி, பிறரும் இது போன்ற ஆழ்ந்த ஆய்வுகளில் ஈடுபடுவார்கள் என நம்பி, இத்தகைய ஆய்வுகளுக்கு உயிரூட்டம் செய்கின்ற அம்மையாருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

புலவர் முத்து இராசரத்தினம்
54, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
25.03.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூல் இவர்களுக்காக

ஈழத்துத் தமிழினப்படுகொலைக்கு உடந்தையாக இருந்த இந்திய மத்திய அரசின் காங்கிரஸ் ஆட்சிக்கெதிரான போராட்டங்கள், நான் இந்நூலை எழுதிக் கொண்டிருக்கையில் தீவிரமடைந்திருந்தன. அதனால், ஈழத்து மக்களின் துயரைத் தாங்கிக்கொள்ள முடியாது சேலத்துத் தமிழ் மகன் விஜயராஜ் 18- 3 -2012 அன்று தன் உடலைத் தீக்கிரையாக்கி உயிர்நீத்திருந்தார். பின் கடலூர் மாவட்ட ஆட்சி அலவலகத்தின்முன் நல்லவடு ஊரைச்சேர்ந்தவரும், குடும்பத்தவரும், முதுகலைப்பட்டதாரியும், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான இளமணி தன் குடும்பநலன்களையும் துச்சமாகக் கருதித் தீக்குளித்து 4 - 3 - 2013 அன்று தன் உயிரைத் துறந்திருந்தார்.

இந்த இருவரின் உயிர்த்தியாகங்களை ஈழத்தமிழ் மக்கள் மட்டுமன்றி, உலகத்துத் தமிழ்மக்களும் ஒன்றாக இணைந்து கண்ணீர்மல்கி, எப்பொழுதும் நெஞ்சங்களில் இருத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. அதனால் இந்நூலினை அவர்கள் இருவரிற்கும் சமர்ப்பித்து, வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. வரலாற்று அறிமுகத்தின் பார்வை: பழங்கால மனிதன் குகைஓவியங்கள் காட்சிப்படுத்திய வரலாற்றுண்மைகள்.

2. எழுத்துக்குறியீடுகள் மூலம் தமிழ் இலக்கியங்கள் பெருமளவிற் தோன்றியிருந்தாலும், காலவரிசைப்படி தொகுக்கப்படாமையினால், தமிழகபூர்வீக வரலாறுகள் குழப்பமானவையே.

3. தமிழர் வரலாறுகளை குழப்பியுள்ள பெயர் ஒற்றுமைகள்

4. தமிழில் இறை வழிபாட்டினை நெறிப்படுத்திய நக்கீரர்கள் பற்றிய கால ஆய்வுகள்.

5. பொதுத்தலைப்பு : காலத்தைவென்று உள்ளங்களை உருவகவைக்கும் மாணிக்கவாசகரின் கால ஆய்வுச் சிக்கல்கள்.

உபதலைப்பு:

I) மாணிக்கவாசகர் ஒருவராயினும், அவர் குறிப்பிட்ட வரகுணனால் இவரது காலம் குழப்பமுறலாயிற்று.

II) மூவேந்தர் ஆட்சியில் இடம்பிடித்த கோசர்களும், மாணிக்கவாசகர் குறிப்பிடும் உத்தரகோச மங்கையூரும்.

III) தமிழகத்தில் ஆதிப்பாண்டியரும், ஆதிநாகரும் ஒன்று கலந்துவிட்ட நிலைகள்.

IV) மாணிக்கவாசகர் காலத்தின்பின் ஏற்பட்ட களப்பிரர் படையெடுப்பும், சமணம் சைவத்தை நிலைதளரச்செய்த பிற்பட்ட நிகழ்ச்சிகளும்.

V) மாணிக்கவாசகரைப் பிற்கால வரகுணபாண்டியர்களுடன் தொடர்புபடுத்தும் ஆய்வுகள்.

VI) சிலபாண்டிய மன்னர் வைதீக வேள்விகளை வளர்த்த சூழலிலும், தமிழ் வளர்த்த பாண்டியர்களையே மாணிக்கவாசகர் போற்றியவராவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII) மாணிக்கவாசகர் நினைவுகூரும் சிவபக்தர்கள் அனைவரும் காலத்தால் முற்பட்டவர்கள்.

VIII) பிள்ளையார், விஷ்ணு வழிபாடுகள் அறிமுகமாகிய காலம் முதலாகத் தமிழகம்.

IX) மாணிக்கவாசகருக்கும் பிற்பட்டிருந்தவர்களான திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் குறிப்பிடும் சமய அரசியல் நிகழ்ச்சிகள்.

X) கோவையை முதன் முதலாக இறைநூல் என அடையாளப்படுத்திய கல்லாடர் காலம் யாது?

XI) மாணிக்கவாசகர் குறிப்பிடும் சிவதலங்கள் பழமை வாய்ந்தவையே.

XII) மாணிக்கவாசகர் குறிப்பிடும் ஆகமத்தின் காலம் யாது?

XIII) மாணிக்கவாசகர் பாடல்கள் காலத்தால் முற்பட்ட நாட்டார் பாடல்களின் இயல்பு கொண்டவை.

XIV) சைவ உலகம் மாணிக்கவாசகரை கி.பி 3-9 ஆம் நூற்றாண்டுவரை ஒதுக்கியிருந்தது ஏன்?

XV) பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர்கள் கால அடிப்படையில் தொகுத்தாரில்லை.

XVI) தேவாரங்களைக் காட்டிலும் உள்ளங்களை உருகவைத்த திருவாசகத்தின் பெருமைகள்.

XVII) நாம் அனுபவித்த மாணிவாசகர் தெய்வீகப் பாடல்கள்.

XVIII) உசாத்துணை நூல்கள்.

XIX) பின்னிணைப்புப் படங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக அடிகளின் கால ஆய்வுகளும், அவரது இறையனுபவங்களும்

(மீண்டும் உங்களை நாடி)

**வரலாற்று அறிமுகத்தின் பார்வை**

**பழங்கால மனிதன் குகைஓவியங்கள் காட்சிப்படுத்திய வரலாற்று உண்மைகள்;**

காலத்தைவென்று இன்றுவரை எம் நெஞ்சங்களிலிருந்து எம்மை நெறிப்படுத்தி வருகின்ற தமிழ் அறிவுக்களஞ்சியங்கள் பலப்பல. ஆனாலும், மனிதன் தன் நுண்ணறிவுகொண்டு அவற்றின் காலத்தினை அறியத்துடிப்பது அவனது இயல்பாகும். மனித நாகரிகத்தின் தொடக்க ஏடுகள் பல குகைகளிற் பேணி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மனிதனின் பழையபதிவுகள் அற்புதமானவை. இவற்றின் காலத்தை ஆய்வதில் அதிக சிக்கல்கள் இல்லை. ஏனெனில் இவை, ஒரு சிலவாயினும் பல்வேறுகாலத்தில் வாழ்ந்த ஆதிமனிதர்கள் கூடத் தம்வாழ்வு முறைகளைப் பதிவுசெய்யவிரும்பிய வரலாற்று எழுத்தாளராக இருந்துள்ளார்கள். இவனுக்கு ஒருநாடு, ஒருஅரசு, ஒருசமூக வாழ்வு என எதுவும் இருந்திருக்கவில்லை. ஆனால், குகைகளிலேதஞ்சமடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில், தன் வரலாற்றினைப் பதிவுசெய்திருந்தான். இவன் தன் வரலாற்றுப் பதிவுகளை இயற்கையாகக் கிடைக்கப்பெற்ற குகையின் சுவர்களில் வண்ணங்கள் கொண்டு ஓவியவடிவில் தீட்டியிருந்தான். அவன் தன் முகத்தைப் பதிவு செய்து எமக்கு அறிவுறுத்தமுடியாத நிலையிலும்கூட, தன் அறிவின் செயற்பாடுகளையும், உணர்வுகளையும் கைகளாற் பதிவு செய்திருந்தான். இதுதான் அவனது கல்வியும், புலமையுமாகும். அவன் பாடியிருப்பான், ஆனால் அதனைப் பதிவு செய்துகாக்க இசைக்கருவிகள் அவனிடமிருக்கவில்லை. அவனது ஒலிகள் காற்றிற் கலந்து சூழலை மகிழ்வித்திருக்கலாம், இனி அவனது பதிவுகள் சிலவற்றை இங்கு நினைவு கூர்ந்து மனித வரலாற்றின் தொடக்க நூல்களை மீட்டுப் பார்த்து மகிழ்வோமாக.

இன்று பாலைவனமாக இருக்கும் வட ஆபிரிக்காவிலுள்ள சகாராப்பாலைவனம் ஒரு காலத்தில் மனிதவாழ்விற்கு ஏற்றதாயும், பசுமையானதாகவும் இருந்ததென்பதனை ஆதிமனிதன் எடுத்துக்கூறுவதற்கு வரைந்த குகை ஓவியங்களை இன்றைய மனிதர் கண்டு பிடிக்கும்வரை எமக்குத் தெரிந்திருக்கவில்லை. இங்குள்ள குகைகளிலே தன்வரலாற்றினைச் சுவைமிக்கதாக்க அவன் ஆடு, மாடுகளுடன் கைகளிற் கத்திகளை வைத்திருப்பதாக ஓவியத்தினைத் தீட்டியுள்ளான். கத்திகள் இரும்பினாற் செய்யப்பட்டதென்பதனால், அவனது தொழில்நுட்பவளர்ச்சி கருத்திற் கொள்ளத்தக்கதாகும். இனி, ஆபிரிக்கக் கண்டத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நமீபிய (Namibia) பாலைவனத்தின் குகைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டப்பெற்றுள்ள விலங்குகளின் ஓவியங்களும், அப்பகுதி ஒருகாலத்திற் பசுமையான சூழலைக் கொண்டிருந்தது என்பதனையே அடையாளப்படுத்துகின்றதெனலாம்.(Dr. Ewan McLeish, Conserving our World, The spread of Deserts, Wayland .P - 10)

இவ்வாறே, ஐரோப்பாக்கண்டத்தில், பிரான்சில் ஆதிமனிதன் தன் அறிவாற்றலைப் பல்வேறு வடிவங்களிற் பதிவுசெய்ய முற்பட்டிருந்தமை சிறப்பானதொன்றாகும். லஸ்கௌக்ஸ் (Lascaux) குகையின் சுவர்களில் நன்றியுடன் தன் வாழ்வின் பங்காளிகளான செம்மான், எருது, குதிரைகள் ஆகியன சிவப்பு, மஞ்சள், மண்நிறம், கறுப்பு முதலான வண்ணக்கலவைகொண்டு உயிரூட்டப்பெற்றுள்ளன. இவ்வாறு அவனது சிந்தனைகளைக் காலமும் அவ் வண்ணமே பேணித்தந்துள்ளமை, மனிதன் காலத்தை வெல்ல எடுத்த முயற்சியென்றே கருதவேண்டும். மேலும், தென் பிரான்சில் நியாக்ஸ் (Niaux) எனும் குகையின் இருள்மிக்க உட்புறச்சுவரில் அவன் எருமைகளை வரைய என்ன, என்ன முயற்சிகளையெல்லாம் எடுத்திருப்பான் என உய்த்துணரமுடியும். (Whsmith's edition, Pre – historic Life, Encyclopedia, P - *127)* இப்பகுதியில்உள்ள ரௌஃபிக்னக் (Ronffignac) எனுமிடத்தில் நூறு பெரும் யானைகள் (The Cave of a hundred Mammoths ) என்றழைக்கப்படும் குகையில், பெற்றோர் கண்காணிப்பின்கீழ் சிறுவர்கள், தொடர்ந்து பூமியில் வாழமுடியாது மறைந்துபோன பெரிய யானைகள், காண்டாமிருகங்கள், குதிரைகள்

* இப்பகுதிகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான வரலாற்றுப் படங்கள் பின்னிணைப்பு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றினை வண்ணங்களால் தீட்டுவதென்பது 13,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடசாலை நிகழ்ச்சியெனக் கேம்பிரிட்ஜ்பல்கலைக்கழக ஆய்வாளர் கருதுவர் (Metro, Daily News, Sep . 30, 2011. P. 7)

இனி ஆசியாக் கண்டத்தின் பக்கம் திரும்பினால், ஆதிமனிதன் பல தொழிநுட்பங்களுடன் வாழ்ந்திருந்தான். என்பதனைக் கிழக்குத் தீமோரில் (East Timor) உள்ள ஜெரிமலைக்குகை (இது எரிமலை எனும் தமிழ்ச் சொல்லின் திரிபாகும்) அகழ்வாய்வுகளிற் கிடைக்கப்பெற்ற எச்சங்களின்படி 16,000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதியில் வாழ்ந்திருந்த ஆதிமனிதன் ஆழ்கடலில் மீன் பிடிக்கவும், கடல்களை நீந்தி அவுஸ்திரேலியா செல்லக்கூடியவகையில் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டிருந்தான் எனவும், அவுஸ்ரேலிய ஆய்வாளர் கருதுவர். (Deccan Chronical, Chennai, 26-11-2011 pii) பூமி பன்கியா (Panngaea) எனும் ஒரு கண்டமாயிருந்து பின் லௌரேசியா, கொண்ட்வானலாந்து என இரு கண்டங்களாகி, காலப்போக்கில் ஐந்துகண்டங்களாகவும், பற்பல தீவுகளாகவும், பூமியதிர் வுகளில் ஏற்படுத்தப்பட்ட வரலாறு ஒன்று பூமிக்குக் உளது. இதனைஉறுதி செய்யயும் வகையில் தென்கண்டத்திலிருந்து பிரிந்து தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா முதலான பகுதிகளில் தொடர்ந்தும் வாழும் விலங்குகள், தாவரங்கள் என்பன காணப்படுகின்றன. குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாக அவுஸ்திரேலியா இருந்ததிற்கான ஆதாரமாக, அங்கு தொடர்ந்தும் வாழும் பழங்குடிகளும், பழைய திராவிடவினத்தினர் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்தப்பட்டிருப்பதும்குறிப்பிடத்தக்கதாம். அவுஸ்திரேலிய பழங்குடிகளில் வடமன் (Wadaman) என்போரின் ஓவியங்கள் மக்களையும், விலங்குகளையும் மட்டுமன்றி, அவன் வைத்திருந்த கடவுள் நம்பிக்கையின் மறைபொருள்கொண்ட வழிபாட்டு உருவங்களையும் கொண்டவையாம். இவ்வாறு எழுத்துருக்கள் இல்லாதகாலத்தில் அவன் எண்ணப்பதிவுகள் ஒரு சிலவற்றை ஓவியங்கள் மூலம்பதிவு செய்திருந்தான். இதுவே மனிதனின் முதற்புத்தகமுமாம். இந்தப்பதிவுகள் காலத்தால்அழிக்கமுடியாத ஊடகங்களாகவே இன்றுவரை அமைந்துள்ளன. மேலும் பழைய பாரம் பரியத்தினைப் பேணிவரும் அவுஸ்ரேலியப் பழங்குடியினர் தொடர்ந்து பேணிவரும் (Corroboree) கொரபொரி விழாக்கள், இயல், இசை, நாடகங்களின் ஆரம்பநிலையையும் நினைவுகூர வைக்கின்றன எனலாம். (Martin Jenkins, Deserts People and places in peril, Cherrytree Press Ltd, 1995).

**எழுத்துக்குறியீடுகள் மூலம் தமிழ் இலக்கியங்கள் பெருமளவிலே தோன்றியிருந்தாலும், காலவரிசைப்படி தொகுக்கப்படாமையினால் தமிழகப் பூர்வீக வரலாறுகள் குழப்பமானவையே.**

காலப்போக்கில் மனித வாழ்வின் வளர்ச்சியின் ஒரு முக்கிய கட்டத்தினைக் குறியீட்டு எழுத்துக்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. இவை முதலிற் களிமண் தட்டுக்களில் எழுதப்பட்டனவாம். இவை ஒரு குறிப்பிட்ட அளவிலே உருவாகியிருந்தன. பின் ஏடுகளில் எழுதப்பழகியதனால் அதிகம் எழுத முயன்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் நூல்களையே உருவாக்கினான். அவற்றினை மன்னர்சபைகளில் அரங்கேற்றம் செய்தமை பற்றியும் பதிவும் செய்திருந்தான். இப்படியான நூல்களிலே தொல்காப்பியம், திருக்குறள் ஆகியன எத்தனையோ தலைமுறையினருக்குப் பழந்தமிழரின் சமய, சமூக, அரசியல் வரலாறுகளை எடுத்துச்செல்கின்ற ஊடகங்களாகத் தொடர்ந்தும் பணியாற்றிக்கொண்டேயிருக்கின்றன. ஏறக்குறைய கி.மு.1850முதல் கி.பி. 1ஆம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கண, இலக்கியங்களோடு, அறிவுசார் இலக்கியங்களும், அகவியல் இலக்கியங்களும் நாம் வியக்கும் அளவிற்குத் தமிழில் உருவாகியிருந்தன. இவற்றுட்பல கடலுட் தாண்டுபோயிருந்தன. அதனோடு இறைவனும் மட்டுப்படுத்தியிருந்தார் என்பதனைத் திருமூலர் "தமிழ்ச் சாத்திரம் பொங்கி மிகாமை வைத்தான்", என்பதன்மூலம் உணரமுடிகின்றது. எனினும், மற்றமொழிகளுடன் ஒப்பிடுகையில் தமிழிலேதான் சைவ, வைணவ, சமண, பௌத்த, கிறித்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள் காலந்தோறும் உருவாகியிருந்தன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இவை பொங்கி வழியாவிடினும் அறிவுச் சுரங்கங்களாக இருந்து இன்றும் முடிவற்ற ஊற்றுக்களாகவே பெருகி ஓடிக்கொண்டிருக்கின்றன. மனிதகுலம் இப்பூமியிலே தொடர்ந்து வாழும்வரை, இவர்கள் எமக்கு முகம் தெரியாத மனிதர்களானாலும் நீடுழிகள் வாழ்பவர்களே ஆவர். இப்பழைமையின்மீது பயணித்து மகிழ்பவர்களாகவே நாமும் வாழ்ந்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் வரலாறுகளைக் குழப்பியுள்ள பெயர் ஒற்றுமைகள்

இவ்வாறு, பழந்தமிழர் பெருமைகள் பல்துறைகளைச் சார்ந்தனவாயினும், இவர்கள் விட்ட மிகப்பெரியதவறு தமது வரலாறுகளைக் காலவரிசைப்படுத்திச் சொல்லாமையேயாம். திருவள்ளுவர் ஆண்டு தற்பொழுது 2044 என மெய்கண்டான் நாற்காட்டி இன்று காலவரையரை செய்ததுபோல், அன்று வரையறைசெய்யப்பட்டிருக்கவில்லை என்றே கூறவேண்டும். மேலும் ஒரு சில புலவர்கள் புகழ்பெற்ற தம்முன்னோர் பெயர்களையே பெற்றிருந்தமையினால், இவர்கள் காலத்தினை நிர்ணயம் செய்வதென்பதும் மிகவும் சிக்கலான விடயமாகிவிட்டுள்ளது. இப்பெயர் ஒற்றுமையினாலே காலங்களை வைத்து ஆய்வாளர்கள் இவர்களைச் சரியாக அடையாளம் காண்பது என்பது இறுக்கமான முடிச்சுகளாகவே அவதானித்துள்ளனர். எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவர் காலத்தைத் தொடர்ந்து வாழ்ந்த ஔவையார் சங்ககாலப் புறநானூற்றுச் செய்யுள்கள் (91,95,97,367) பலவற்றை யாத்துத் தன் அறிவாற்றலைப் பதிவு செய்தவரும், அதியமான் அஞ்சியின் அவைப் புலவராக மட்டுமன்றி, தொண்டைமானிடம் தூது சென்று இவர்களுக்கிடையே ஏற்படவிருந்த போரைத் தவிர்த்தவருமாவர். இவ்வாறு தமிழ்ப்பெண்களின் பெருமையினை இன்றுவரை பறைசாற்றிவருகின்ற இவர், மூன்றாம் தமிழ்கெழுகூடல் காலத்தவராவார். ஆனால், பிற்காலத்தில் வேறு இரு ஔவையார்களும் வாழ்ந்து அறிவுசார் இலக்கியங்களை யாத்து, தம்புகழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநிறுத்தியுள்ளனர். அவர்களில் ஒருவர் கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த சேரமானுடனும், சுந்தரருடனும் கைலாயம் செல்வதற்காக அவசரம், அவசரமாகப் பிள்ளையார் பூசையை நிகழ்த்தினார் என்று பேசப்படுபவர் ஆவர். இவருக்குப் பின்னர் பிள்ளையார் வழிபாட்டினை தமிழகத்தில் மக்கள் மயப்படுத்திய இன்னோர் ஔவையாரும் பதிவாகியுள்ளார். இவர்தான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதி நெறிகளைப் பாடியதோடு, பிள்ளையாரிடம் "சங்கத்தமிழ் மூன்றும் தா" என வேண்டியவரும் ஆவர். இவரை முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) காலத்தவர் என்று சிலரும், வேறுசிலர் முதலாம், இராசராசன் (கி.பி. 985-1040) காலத்தவர் என்றும் காலக் கணிப்புச் செய்வதிலும் இடர்ப்பாடுகள்உள. இவ்வாறு வெவ்வேறு காலங்களிலே வாழ்ந்து தமிழுக்குப் பெருமைசேர்த்த ஔவையார்கள் ஓரளவிற்குக் குழப்பமில்லாமல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் எனலாம்.

## தமிழில் இறைவழிபாட்டினை நெறிப்படுத்திய நக்கீரர்கள் பற்றிய காலஆய்வுகள்.

மூன்றாம் தமிழ்க்கெழுகூடலில் நாற்பத்தொன்பது (49) புலவர்களுக்குத் தலைமைதாங்கிய நக்கீரர் மூன்று முக்கிய நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவராகக் காணப் படுகின்றார். தென்மதுரை, அலைவாயில் (கபாடபுரம்), வடமதுரை (ஆலவாய்) ஆகிய தலைநகர்களில் தமிழ் வளர்க்கத் திருவிளையாடல்களைச் செய்திருந்த இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளாகச் சிவனும், முருகனும் அன்றிலிருந்து இன்று வரை தமிழ் சைவ மக்களால் வணங்கப்படுகிறார்கள். இரண்டாம் கடல்கோளினால் குமரிக்கண்டம் முற்றாகக் கடலுட் தாண்டபொழுது பாண்டியமன்னன் வடக்கே புலம்பெயர்ந்து வடமதுரையில் தமிழ் வளர்த்திருந்தான். அப்பொழுது சிவனும், முருகனுமே தமிழை வளர்க்கத் துணையாக இருந்தனர் என்பதனால், நக்கீரரின் புலமையும், இவர்களால் தூண்டப்பெற்றதென்பதே புலனாம். இப்பின்னணியில் நக்கீரர் பூதமொன்றின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்காக "முருகப்பெருமானை நினைத்துப் பாடிய திருமுருகாற்றுப்படை" முதலில் தமிழில் எழுந்த சமயநூலாகக் கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து இவருக்கு இன்னோர் சோதனை ஏற்படுகின்றது. ஆலவாய்ப் பெருமானிடத்திலே தருமி எனும் பக்தன் தன் திருமணத்திற்குப் பணம் வேண்டி இரந்து நிற்கையில் இறைவன் தருமிக்கு "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி......... அரிவை கூந்தலின் நறியவும் உளவோ நீ அறியும் பூவே" (குறுந்தொகை செய்.2) என்ற பாட்டை எழுதிக் கொடுத்துப் பாண்டியனிடம் ஆயிரம் பொன்னைப் பெறும்படி கூறியிருந்தார். பின் இறைவன் தானும் புலவர் வேடந்தாங்கிச் சென்று, பாட்டிற் குற்றம்கண்ட நக்கீரரோடு வாதாடி நெற்றிக்கண்ணைக்காட்டியதனால், நக்கீரர் வெம்மையாற்றாது வாவியில் மூழ்கித் தன்குற்றம் பொறுக்கும்படி பாடிய பாடல்களே "கயிலை பாதி காளத்திபாதி" முதலான ஒன்பது நூல்கள் என்று கருதப்படுகின்றன. இவற்றுள் கோபப்பிரசாதம், போற்றித்திருவகல், திருஎழுகூற்றிருகை, பெருந்தேவபாணி, போற்றிக்கலிவெண்பா என்பன "கொங்குதேர் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சிறைத் தும்பி" எனும் பாடலுடன் தொடர்பானவை. இந்த நிகழ்ச்சிகளையே கோவையின் 'கருப்பொருள் இறையின்பமே' என எடுத்துக்காட்ட விரும்பிய கல்லாடர், நக்கீரர்பற்றி

"அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங்களத்தினன்"
(கல்லாடம் உரைநடை-49) எனவும்"

அப்பர் சுவாமிகள்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"
( திருப்புத்தூர்த் திருத்தாண்டகம்)

எனவும் நினைவு கூர்ந்தனர். ஆனால், சில ஆய்வாளர்கள் இந்நூல்களைப் பிற்காலத்தைச் சேர்ந்த நக்கீரரே பாடினார் என்று கருதுவர். இவைமட்டுமன்றிப் பிற நூல்களான திருஈங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, கார்எட்டு,, திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஆகியவற்றை மூன்றாவது நக்கீரர் ஒருவர் பாடினார் என்பர். ஆனால், திருஈங்கோய்மலை எனும் நூலின் அகச்சான்றுகள் கொண்டு இதனைச் சங்ககால நக்கீரரே பாடியவர் எனப் பாலூர் கண்ணப்ப முதலியார் அரண் செய்துள்ளார். இவ்வாறு மூன்றாம் சங்கப் புலவரான நக்கீரரே முருகனைப் போற்றி வழிபட்டதனால் அவருக்குத் திருப்பரங்குன்ற முருகனின் பக்கலில் அமர்ந்திருக்கும் நிலை ஏற்படலாயிற்று. அதனோடு காளத்தியில் இறைவனுக்கே நத்கீரநாதர் எனப் பெயரும், திருஈங்கோய்மலையில் இவருக்குச் சிலையும், நிவந்தங்களும், மற்று மதுரை மேலமாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் நக்கீரருக்குக் கோயிலும் (இது சங்கத்தார் கோயில் எனவும் அழைக்கப்படும்) என நினைவுகூருமுகமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இனி, மூன்றாவதாக இவருடன் தொடர்புபடுத்தப்படும் நிகழ்ச்சி, இவரே இறையனார் அகப்பொருளுக்கு உரைகண்டார் என்பதாகும். குறிப்பாக, இரண்டாம் கடல் கோளின் பின் உருவாகிய வடமதுரைப் பாண்டிய அரசில் மன்னன், அகப்பொருள்பற்றிக் கூறுவார் எவரும் இல்லாதநிலையில் கவலையுற்றிருந்தான். அப்பொழுது உலகஇயக்கம் அற்றுப்போகாமல் இருப்பதற்கு அகப்பொருட்கூறு அவசியம் என்பதனால் ஆலவாய்க் கடவுள் (சிவன்) அகத்துறைநூலை வகுத்து, தன் சக்தியான முருகப்பெருமான்மூலம் நிலைநிறுத்தியிருந்தார் என இறையனார் அகப்பொருள் வரலாறு குறிப்பிடும். அதன்படி அன்பினைந்திணை எனத் தொடங்கும் அறுபது செய்யுட்களை எழுதி இறைவன், திருவாலவாய்ப்பீடத்தின் கீழிட்டான். பீடத்தின்கீழ் என்றும் அலகிடாத பூசகர் அன்று அலகிட்டார். அப்பொழுது ஒரு ஏடுவெளிவந்தது. இது மன்னனுக்குத் தெரிவிக்கப்பட்டதும் அதற்கு உரைகாண மன்னன் தன் அவைப்புலவர்களிடம் வேண்டியிருந்தான். மீண்டும் இறைவன் திருவிளையாடல் செய்தான். இடையாமத்தில் "உப்பூரிகுடிகிழார்மகன் உருத்திரசர்மன் ஊமையனாகையால் மெய்ப்பாட்டால் சிறந்த உரையைத் தெரிவிப்பான்" என ஒரு வாக்கு மன்னனுக்கு கேட்டது. அப்பொழுது ஊமையனாகப் பிறந்திருந்த முருகப்பெருமான் அகப்பொருளுக்கு எழுதிய பல உரை களையும்கேட்டு மகிழ்ந்தபின், நக்கீரரின் உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு சொற்றோறும் கண்ணீர்சொரிந்து, மெய்சிலிர்க்க இருந்தான். அப்பொழுது சங்கத்தார் ஆரவாரித்துக் "களவுரைக்கு மெய்யுரைபெற்றாம்" என்றனர். இதனை இறையனார் அகப்பொருள் உரையின் முதற் செய்யுளில் "மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனால் உரைகண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பெற்றது" எனும் குறிப்பிலிருந்தும் உணரலாம். இவ்வாறு சில உண்மைகள் இருப்பினும் இந்நிகழ்ச்சிகளின் காலத்தினைப் பலரும் ஐயுறும் நிலையுண்டு.

இந்நிலையில் நாம் நக்கீரரின் மறுபக்கவரலாறு ஒன்றும் அவருடன் நிழல்போறபயணித்திருந்தது, என்பதனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இவர் அகத்திய முனிவரிடம் தமிழைக்கற்றுத் தமிழின் பெருமையினை அறிந்துகொண்டபின்னரே தம் கோபப்பிரசாதப்பாடலில் "ஆரிய புத்தகப் பேய்கொண்டு புலம்பிற்று" என்றனர். பின்னர் "அகத்திய ராணையால் செந்தமிழே தீர்க்க சுவாக" என்றனர். (இது தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம்பெறும் 490ஆவது வெண்பாவாகும்). இவ்வாறு இவர்தன் வடநாட்டுச்சமய மரபுகளிலிருந்து தன்னை விடுவிக்க முனைந்தபொழுதும், விடுபடமுடியாதவராகவே காணப்பட்டார். திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானைத் தமிழ் மரபின்படியிலான பெயர்களாற் போற்றியிருந்தாலும், வடநாட்டுக்கந்தனின் இயல்புகளான ஆறுதிருமுகங்கள், பன்னிரு திருக்கரங்களையும் சேர்த்துப்பாடியிருந்தார். இவ்வாறே ராமர் தமிழகத்திற்கு அறிமுகம் செய்திருந்த பிள்ளையார் வழிபாடு செல்வாக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிராத காலத்தில், இவர் நினைவுகூர்ந்தமையும், தவிர்க்கமுடியாத செய்தியாகவே கருதமுடிகின்றது. நக்கீரர் பாடியதாகக் கருதப்படும் புறநானூற்றுச் செய்யுள் 56இல் "பிணிமுக ஊர்தி சேய்வோனும்" எனும் குறிப்பும், பின் பழமுதிர்சோலையில் (வரி246) "ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" என்ற குறிப்பும் கருத்திற் கொள்ளத்தக்கது. இவற்றோடு இவர் பாடியதாகக் கூறப்படும் வெண்பா ஒன்றிலும் "ஒரு கைமுகன் தம்பியே" என முருகனைப் போற்றும், இவரது பிள்ளையார் பற்றிய குறிப்புகள் இவரது சமயநம்பிக்கைகளை அடையாளப்படுத்துகின்றன. இவ்வாறு இறைசிந்தையற்று உலகியலில் மோகித்துக்கிடந்த தமிழ் மக்களுக்கு இவர்பாடிய நூல்கள் அனைத்தும் ஒரு வரப்பிரசாதமே.

இறுதியாக, நான்கு கல்லாடர்கள் பற்றிய ஆய்வில் அகநானூற்றிலும், புறநானூற்றிலும் பதினான்கு பாடல்களைப் பாடிய கல்லாடர் மூன்றாம் சங்ககாலத்தவர் என்பது உறுதியாம். இரண்டாவது கல்லாடராகப் பாட்டியலைப் பாடிய, இவர் 9ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்பர். மூன்றாவது கல்லாடர் கண்ணப்பர் திருமறம்" பாடியவர்என்றும், இவர்10ஆம்நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். இவரது பாடல்கள் 11ஆம் திருமுறையில், நக்கீரதேவ நாயனார் பாடிய கண்ணப்பர் திருமறத்திற்கு அடுத்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். நாலாவது கல்லாடரே "அன்பினைந்திணை" எனும் அகப்பொருளைக் கொண்டு மாணிக்கவாசகராலே பாடப்பெற்ற கோவையின் நூறுபாடல்களை எடுத்து, அவற்றின் பொருளினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி, அவற்றின் பொருள் காமத்தின்பாற்பட்டதென்று என ஒதுக்கியவர்களுக்காகப் பாடப்பெற்றதென்றும், இவரது காலம் 11 ஆம் நூற்றாண்டென்றும் சில ஆய்வாளர்கள் கருதுவர். இவ்வாறு இவர்களது வரலாற்றுக் காலத்தை அடையாளப்படுத்த முடியாதிருந்த நிலையில், இவர்களது வரலாறுகள் குழப்பமுற்றுள்ளது. இந்நிலையில் மாணிக்கவாசகருடன் தொடர்புபடுத்தப்படும் கல்லாடர் காலத்தினை நாம் கி.பி.7ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது என்று கருதுவதனால் இவர்பற்றி மாணிக்கவாசகர் காலத்துடன் ஆராய்ந்து காட்டியிருக்கிறோம்.

## இனி, காலத்தை வென்று உள்ளங்களை உருகவைக்கும் மாணிக்கவாசகரின் கால ஆய்வுச் சிக்கல்கள்

## மாணிக்கவாசகர் ஒருவராயினும் அவர்குறிப்பிட்ட வரகுணனால் இவரது காலம் குழப்பமுறலாயிற்று

மேலே ஆராய்ந்தவாறு பழையகாலக் குகைகளில் இடம்பெற்ற வரலாற்றுப் பதிவுகள் காட்சிப்பதிவுகளாக இருக்கையில், குழப்பங்கள் அதிகம் இல்லையெனலாம். ஆனால், எழுத்துமூலம் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைச் சரியாகக் காலவரிசையில் தெளிவாக அடையாளப்படுத்தித் தலைமுறையினருக்கு, அளிக்கத் தவறுவதனால் உண்மை வரலாறுகள் திசைகள் மாறிச்சென்று விடுகின்றன. நாம் இங்கு ஆராய எடுத்த மாணிக்கவாசகர் ஒருவரேயாயினும், அவரது கால நிர்ணயமும், அவர் குறிபிட்ட 'வரகுணன்' எனும் பெயராலே குழப்பமுற்றுள்ளது. எனவே, இவரது காலஆய்வும் அகச்சான்றுகள் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராயப்படவேண்டிய தொன்றாகிவிடுகின்றது.

மணிவாசகர்,

"........வரகுணனாந்
தென்னவனேத்து சிற்றம்பலத்தான் (கோவை செய். 306)
......வரகுணன் வெற்பின் வைத்த
கயலோங்கிருஞ்சிலை" (கோவை செய். 327)

என ஒரு வரகுணமன்னனைப் போற்றியிருந்தனர்.

தமிழக அரசியல் வரலாற்றிற் பாண்டிய மன்னனான இரண்டாம் உக்கிரப் பெருவழுதி ஆட்சிக் காலத்தில் களப்பிரர் என்பார் படையெடுத்துவந்து பாண்டியரசினை நிலைதளரச்செய்திருந்தனர் எனத் தெரிகின்றது. இக்காலத்தின்பின் இடம்பெற்ற பாண்டியராட்சியில் மூன்று பாண்டியர்கள் முக்கியமானவர்கள்.

வரகுணபாண்டியன் I (கி.பி. 235-265)
அரிமர்த்தன பாண்டியன் (கி.பி. 265-310)
வரகுணபாண்டியன் II (கி.பி. 310-340)

இவ்வாறு களப்பிரர் படையெடுப்புக் காலத்தில் ஆண்டிருந்த வரகுணர்களை இப்பட்டியல் குறிப்பிடும். இதே பட்டியலில், வேறுஇரு வரகுணர்கள் பிற்காலத்தில் ஆண்டிருந்தமை பற்றிய குறிப்புகளும் உள. அவர்கள் ஆட்சியாண்டுகள் பின்வருமாறு:

வரகுணன் III (கி.பி. 792-835)
வரகுணன் IV (கி.பி. 862-882)

இந்த நான்கு வரகுணர்களில், மாணிக்கவாசகர் யாரைக் குறிப்பிட்டிருந்தார் என்பதனைத் திட்டவட்டமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடும் சான்றுகள் அற்றநிலையிலே, இவரது கால ஆய்வுகளும் சிக்கலாகிவிட்டுள்ளன. இந்தச் சிக்கலை விடுவிக்க ஆய்வுகளை மேற்கொண்ட மறைமலைஅடிகள், ஜி.யு.போப், கா.சுப்பிரமணியபிள்ளை, அ.சிதம்பரனார் முதலானோர் இவர் முதல் வரகுணபாண்டியனையே போற்றியிருந்தார் என்பதற்காகிய சான்றுகளை முன்வைப்பர். ஆனால், இவர் பிற்கால வரகுணன் II (கி.பி. 862-882) காலத்தின்பின் வாழ்ந்தவர் என, கே. எஸ். ஸ்ரீநிவாசபிள்ளை, **அநவரதவிநாயகம்பிள்ளை**, கனகசபைப்பிள்ளை, வெங்கையா கோபிநாதராயர் T.V. சதாசிவபண்டாரத்தார், கே. என் நீலகண்டசாஸ்திரி முதலானோர் தம் சான்றுகளை ஆராய்ந்து காட்டுவர்.

இவ்விரு காலக்கோட்பாட்டினுள் மாணிக்கவாசகர் முற்காலப் பாண்டியர் காலத்தவர் என்பதற்கு, மறைமலையடிகள் மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியபௌத்தகாவியங்களைத் தொடர்ந்து வந்தகாலத்தில் (கி.பி. 250-282) வாழ்ந்தவர் என்று கூறுவர். இவ்வாறு பௌத்தம் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்த காலத்தையண்டி வாழ்ந்ததாலே "புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்" (திருத்தோணோக்கம் - 24) எனக் குறிப்பிட்டனர் என்பர். அ. சிதம்பரனார் கி.பி 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேரநாட்டுச் செப்புப் பட்டயம் ஒன்றின்படி பாண்டிநாட்டில் அரிமர்த்தனபாண்டியன் (கி. பி. 265-310) ஆள்கையில், சேரநாட்டில் செங்கால் வீரராகவப் பெருமாள் ஆண்டிருந்தனன் என்றும், அப்பொழுது கிறித்தவமதத்திற்கு மாறிய மக்களை மணிவாசகர் மீண்டும் சைவராக்கி "மணிகிராமம்" எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிற் குடியமர்த்தியபொழுது, மன்னன் பாதுகாப்பு வழங்கினான் என்பதனைச் சான்றாகக் காட்டுவர். ஜி.யு.போப்பும் மாணிக்கவாசகர் முற்பட்ட வரகுணன் காலத்தினைத் தொடர்ந்து ஆண்ட அரிமர்த்தன பாண்டியன் காலத்தவர் என்பவர், இவர் அரிமர்த்தன பாண்டியன் திருஞானசம்பந்தர் காலத்தில் சமணம் சார்ந்து ஆண்டிருந்த கூன்பாண்டியன் (இவனுக்கு அரிகேசரி மாற் வர்மன், நின்றசீர் நெடுமாறன் (கி.பி. 670-700)எனும் பிறபெயர்களும் உண்டு) மன்னனுக்குப் பத்துத்தலைமுறைகளுக்கு முற்பட்டவன் என மதுரைப் பாண்டியர் ஆட்சிப்பட்டியல் குறிப்பிடுவதனால், மணிவாசகர், சம்பந்தர் காலத்திற்கு முற்பட்வர் என்பர். கா. சுப்பிரமணியபிள்ளையும், மாணிக்கவாசகரின் செய்யுள் அமைப்புகளும், முறையான தாளக்கோப்பில்லாமற் சுத்தாங்க அமைப்பிற் பாடப்பட்டு வந்ததனாலும், தற்பொழுது பழைமையான மோகனராகத்திற் பாடப்பட்டு வருவதனாலும் இவர் தேவாராசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டவர் என்பர். (இலக்கிய வரலாறு பகுதி II திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புப்கழகம் 1958) மேலும் க.சு. நவநீதகிருஷ்ணபாரதியார், கா. அப்பத்துரை முதலானோரும் இக்கருத்தினையே கொண்டவராவர். இவர்களது கருத்துக்களையே அடியொட்டி எமது ஆய்வுகளும் அமைவதனால் அவைபற்றி இனி ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூவேந்தர் ஆட்சியில் இடம்பிடித்த கோசர்களும், மாணிக்கவாசகர் குறிப்பிடும் உத்தரகோச மங்கையூரும்.**

தமிழகத்தின் பூர்வீகவரலாற்றிற் சைவமும் தமிழும் வளர்க்கும் பணியிற் பாண்டியரே ஈடுபட்டிருந்தனர் என்பதும், இதற்கு உறுதுணையாக இறைசக்திகளான சிவனும், முருகனும் திருவிளையாடல் புரிந்திருந் தனர் என்பதும், பலதலைமுறையினருக்கு எடுத்துக் கூறப்பட்டிருந்த செய்திகளாவன. ஆனால் மக்களிடையே அறம் குன்றுகையில் இறைவன் கடல் கோள்கள், புயல்கள், பூகம்பங்கள் என்பவற்றின் மூலம் தண்டிக்கும்பொழுது, மனிதநாகரிகங்கள் அனைத்தும் ஒருநொடிப்பொழுதில் அழிக்கப்பட்டு அடையாளமற்றுப் போயிருந்தன என்பதற்குப் பல நாடுகளிற் பேணப்பட்டிருக்கின்ற பிரளயவெள்ளக் கதைகள் சான்றுகளாகக் காணப்படுகின்றன. அதனோடு இன்றும் உலகளாவிய அளவில் இயற்கையனர்த்தங்களால் மக்கள் வகைதொகை தெரியாமற் செத்துமடிவதும் கண்கூடாகும். இத்தகைய அனுபவங்களைக் கொண்டு கண்டங்கள் பிரிந்து போகையில் எவ்வளவு பயங்கரமான பூமி அதிர்வுகளும், கடற்கொந்தளிப்புகளும் ஏற்பட்டிருக்கமுடியும் என்பதும் உய்த்துணரத்தக்கது. இத்தகைய பெரும் கடல்கோள்களினால் இருதடவைகள் தமிழரின் பழைய தலைநகரங்களான தென்மதுரை, கொற்கை (அலைவாயில் அல்லது கபாடபுரம் என்றும் அழைக்கப்பட்டிருந்தது) ஆகியனவற்றையும் கடல் உண்டு ஏப்பம் விட்டிருந்தது. இவ்வாறு ஏப்பம்விட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளாகவே ஈழம், மகிளதீவுகள் (இன்றைய மாலைதீவு), இலட்சதீவுகள், மற்றும் இந்துமாக்கடலில் தோன்றியுள்ள பல்வேறு திட்டுக்களும் ஆவன. அதனால் தெற்கேயிருந்த பாண்டியர் நிலங்களையிழந்த நிலையில் வடக்கே புலம் பெயர்ந்து சேர, சோழ நாட்டினரின் நிலங்களைப்பெற்று வடமதுரையைத் தலைநகராக அமைத்து ஆண்டிருந்தனர் என்பதும், மீண்டும் சிவனும், முருகனும், சைவமும், தமிழும் வளர்க்கத் திருவிளையாடல்களைச் செய்திருந்தனர் என்பதும் பாண்டியருடைய வரலாறேயாகும். இங்கு உருவாக்கப்பட்ட மூன்றாம் தமிழ்கெழுகூடலின் 49 புலவர்களின் நுண்மாண்புலமையினால் உருவாகிய இலக்கியங்களே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலானவையாம். இக்காலத்திலிருந்தே தமிழகமன்னர்கள் மூவேந்தர்கள் (சேரர், சோழர், பாண்டியர்) எனப் போற்றப்படலாயினர். முதன் முதலாகத் தொல்காப்பியர் "வண்புகழ்மூவர் தண்பொழில் வரைப்பு" வரையான மூவேந்தர்களையும் சமமாகப்போற்றியிருந்தனர்.

ஆனால், இந்நிலை நீடிக்கவில்லை என்பதனைத் தமிழக அரசியல் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. கி.மு. 273-236 காலப்பகுதியில் மகதத்தினை ஆண்டிருந்த அசோகனது கல்வெட்டு II தன் உறவுநாட்டினராகத் தெற்கேயுள்ள சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தாமிரபன்னர் ஆகிய அரசுகளைக் குறிப்பிடும். இங்கு குறிப்பிடப்பட்ட சத்யபுத்திரரைக் "கோசர்" என்றே ஆய்வாளர் அடையாளம் காண்பர். ஏனெனில், பழந்தமிழ் இலக்கியங்களிலும் மூவேந்தரையடுத்துக் கோசரே போற்றப்பட்டிருந்தனர். கோசர்கள் சொன்னசொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பவர் என்பதனால் சங்க இலக்கியங்கள் அவர்களை "வாய்மொழிக்கோசர்" "கோசர் நன்மொழிபோல வாயாகின்றது" "வாய்மொழி-வளங்கெழுகோசர்" (அகநானூறு 205 வரி 8-12) என்றெல்லாம் பாராட்டியுள்ளன. இவர்கள் விந்தியமலைக்குத் தெற்கே கடலையடுத்துள்ள துளுநாட்டிலும், (இது மங்களூரை நடுவிடமாகக் கொண்டதும், துளுமொழி வழக்கிலுள்ளதுமான மைசூர்ப்பகுதியாகும்) கொங்கு நாட்டிலும் வாழ்ந்திருந்தனர் என இலக்கியக் குறிப்புகள் உணர்த்துகின்றன. எனினும் இவர்களை வத்ஸதேசத்துக் கௌசாம்பி நகரத்தார் என்று வேறுசிலர் அடையாளப்படுத்துவர். இவர்கள் சிறப்பாகப் பாண்டிநாட்டின் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படைவீரர்களாகப் பணிபுரிந்த பொழுது, சோழமன்னன் கிள்ளிவளவனைத் தோற்கடித்துச், சோணாட்டின் பெரும் பகுதியினைப் பாண்டிநாட்டுடன் இணைத்தவர்கள் ஆவர். பின் பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்த ஏழரசர்களின் கூட்டுப்படைகளையும் தோற்கடித்திருந்தனர். அதனோடு வடுகர் (தமிழகத்திற்கு வடக்கே வதியும் தெலுங்கர்) துணையுடன் தெற்கே படையெடுத்து வந்த மௌரியர் படைகளையும் நிலையழித்திருந்தனர். இவ்வாறு பலவெற்றிகளைப் பாண்டியருக்கு ஈட்டிக்கொடுத்த கோசருக்குப் பாண்டியமன்னர்கள் பல குடியிருப்புக்களை வழங்கியிருந்தனர். அவற்றுள் மோகூர், ஆலம்பலம், கோசர் பாடி என்பன சிலவாம். இந்தக்கோசர் பாடியில் அமைந்திருந்த சிவத்தலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதமாவட்டத்திலுள்ள உத்தரகோசமங்கையாகும். இதனை உறுதி செய்யும் வகையில் அகநானூற்றுச் செய்யுள் 200, பரசுராமர் செல்லூரில் யாகம் செய்தார் என்பதும், இச்செல்லூர் இராமநாதபுரத்திலுள்ள செல்லூராகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளதும் இங்கு சான்றாகக் கொள்ளக்கூடிய செய்தியாகும். மேலும் அகநானூறு செய்யுள் 90 உம், இதனை உறுதிசெய்யும் வகையிற் கோசரின் நியமத்திற்கு மேற்காக பரசுராமரின் செல்லூர் இருந்ததாகக் குறிப்பிடும். இவ்வாறு கோசர்கள் இராமநாதபுரத்துடன் தொடர்பு கொண்டிருந்ததனலேயே உத்தரகோசமங்கை என்ற பெயருடன் இச்சிவத்தலம் பெயர் பெறலாயிற்று எனக் கருதமுடிகின்றது.

இப்பழம் பாண்டிய நாட்டுடன் தொடர்பான உத்தரகோச மங்கையில் முதலில் மாணிக்கவாசகர் சிவநெறியை அனுபவித்திருந்தனர். பின்னர் அரிமர்த்தன பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கச் சென்றிருந்த பொழுது, திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை மாவட்ட ஆவுடையார் கோவில் ) ஆகம ஒலிகேட்டுச் சென்று ஞானகுருவினையும், அவரது 999 அடியார்களையும் கண்டிருந்தனர். மாணிக்கவாசகர் "நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம் பையிற் புகச் செய்து" என்பதாலும், உன் பழ அடியார் கூட்டம் அடியேன் காண ஆசைப்பட்டேன், தன்னடியாரிற் கூட்டிய அதிசயங்கண்டோமே (திருவாசகம் - அதிசயப்பத்து) என்பதனாலும், இவர் முற்பிறவியில் 1000 கணநாதருள் ஒருவராய் இருந்து கவனக்குறைவால் மானுடப்பிறவி எடுத்தார் என்பதும் உறுதியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் "கட்டறுத்தெனை ஆண்டு கண்ணார நீறிட்ட அன்பரொடி யாவருங்காணவே பட்டி மண்டபம், ஏற்றினை" (திருச்சதகம் வரி 197-199) என்பதனாலும் இது அரண்செய்யப்படுகின்றது. 'குடமுழுநந்தீசு வரனை வாசகனாகக் கொண்ட' எனும் அப்பர் தேவாரம் இவரை நந்சீசுவரரின் அவதாரம் எனக் கருதுவதாகச் சிலர் கருதுவர். ஆனால் கே. எஸ் ஸ்ரீநிவாச பிள்ளை இதனை மறுத்து அடிகள் 1000 கணநாதருள் ஒருவரே என்பர். எனவே திருப்பெருந்துறையில் இவ்வாறு குருந்தமர நிழலில் இவ்வடியார்களுடன் உபதேசம் பெற்றிருந்த பின், இறைவன் 999 அடியார்களுடன் தீச்சுவாலையில் மறைந்தமை கண்டு ஆற்றாதழுது இருக்கையில், இறைவன் அவருக்கு உத்தரமங்கையின் வேடத்தைக் காட்டியாற்றியிருந்தார் என்றும் தெரிகிறது.

"உத்தர கோச மங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பும்"

"தன்னீறு எனக்குளித் தன் கருணை வெள்ளத்து

மன்னூற மன்னுமணி யுத்தரகோசமங்கை (பொன்னூசல் 3) என நினைவு கூர்ந்திருந்தனர். அப்பர் பெருமானும் இவர் உத்தரகோச மங்கை இறைவனுடன் கொண்டிருந்த ஈடுபாட்டினை",

குசையு மங்கையிற் கோசமுங் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே"

(திருவிசைய மங்கைத் தேவாரம்)

எனக் குறிப்பிட்டனராகலாம். இவ்வாறு கோசரின் மறக்கப்பட்ட வரலாறுகளை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இறையனுபவங்களைக் கொண்டு மீட்கமுடிகிறது. பிற்காலத்தில் இதன் பெருமை மறக்கப்பட்டநிலையிலேதான் தேவாராசிரியர்கள் இக்கோவிலின் பெருமைகளைப் பாடவில்லையெனத் தெரிகின்றது. மேலும் மாணிக்கவாசகர் பழம்பாண்டியரின் தென்பாண்டிநாட்டினையே இறைவனது நாடென்றும், அவரது ஊர் உத்தரகோச மங்கை (கீர்த்தி - 120) என்பதனாலும், பாண்டியரின் பழைய அரசியற் பின்னணிகளையே இவரது பாடல்களில் எப்பொழுதும் நினைவு கூரப்படுவதும், இவரது காலத்தை உறுதி செய்யும் சான்றுகளாகும்.

## தமிழகத்தில் ஆதிப்பாண்டியரும், ஆதிநாகரும் ஒன்றுகலந்து விட்ட நிலைகள்.

குமரிக்கண்ட பழந்தமிழ்க்குடிகளில் ஒரு பிரிவினரான நாகர்கள் அரவவழிபாட்டினை மேற்கொண்டிருந்தவராவர். இவர்களின் அரவ வழிபாடு புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடையே அன்று தொட்டு இன்றுவரை பேணப்பட்டிருப்பது ஒரு சமய வரலாறாகும். எனினும் நாகர்கள் இந்தியாவின் பல பாகங்களை நோக்கிப் பரவுகையில், வடஇந்தியாவிற்குள் ஆரியரின் படையெடுப்புக் காரணமாகப் பெருமளவில் மீண்டும் தென்நோக்கிப் பரவத் தொடங்கியிருந்தனர். அப்பொழுது தமிழகத்திலும், ஈழத்திலும் அரசுகளை அமைத்திருந்தாலும் காலப்போக்கில் தமிழகத்தின் பாரம்பரிய தமிழ் அரசுகளுடன் ஒன்று கலந்துவிட்ட நிலையில், இவர்களைத் தனியரசுகளாக இலக்கியங்கள் குறிப்பிடவில்லை. இருப்பினும்தமிழகத்திலும், ஈழத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாக அரசுகளின் ஆட்சிகள் மிகப்பழைமை வாய்ந்த வரலாறுகளாக அவதானிக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் பழையபாண்டிய அரசுகளின் தலைநகரான கொற்கை, உரகபுரம், புஜகநகரம் என வடமொழியாளர்களால் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் சோழநாட்டிலும், காஞ்சியை அண்டிய பகுதிகள் கி.பி 150 ஆம் ஆண்டுவரை நாக அரசுகளாலே ஆளப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் பல்லவர்கள் இந்நாக அரசுகளின் கீழ்த் திறையதிகாரிகளாகப் பணியாற்றியவர்கள் எனச் சர்க்கார் குறிப்பிடுவர். இவ்வாறான அரசியல், சமய, சமூகச் சூழலில் நாகவழிபாடு சிவன், முருகன் வழிபாடுகளில் ஒன்றாகி விட்டநிலையும் உருவாகியிருந்தது. இக்காலத்தில் வாழ்ந்ததனாலே மாணிக்கவாசகர் இறைவனை "புஜங்கப்பெருமான்" (யாத்திரைப் பத்து) என்றும், புஜங்கன் என்றும் விழித்தனர் எனலாம். அதனோடு தனது கால அரசியற்பின்னணிகளையும் "தென்னவன், சேரலன், சோழன், சீர்புஜங்கன் வரக்கூவாய்" (குயிற்பத்து-28) என நினைவு கூர்வது அவர் வாழ்ந்தகாலத்தின் தாக்கம் என்றே கருதமுடிகின்றது.

## மாணிக்கவாசகர் காலத்தின் பின் ஏற்பட்ட களப்பிரர் படையெடுப்பும், சமணம், சைவத்தை நிலைதளரச் செய்த பிற்பட்டநிகழ்ச்சிகளும்.

துவாரைகையிலிருந்த அருவாளர்களைக் காஞ்சியில் அகத்திய முனிவராற் குடியமர்த்தப்பட்ட நாள்முதல் சமணம் தமிழகத்திற்கு அறிமுகமாகியிருந்தது. நெல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில்கண்டகூர்பகுதியின்மாலகொண்டாஎனும் குகையில்பிராகிருதமொழியில்பிராமிஎழுத்தில்கி.மு8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டகல்வெட்டுப்படி இக்குகையில் சமணர்கள் வாழ்ந்திருந்தனர் என்பது உறுதியாம். பின்னர் கி.பி. 470இல் சமணரான வச்சிரநந்தியினால் திராவிடசங்கம் ஏற்படுத்தப்பட்டுத் தமிழ் வளர்த்ததன் பயனாகவே சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, பெருங்கதை முதலான நூல்கள் தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறையை அறிமுகமாக்கியிருந்தன என்பதும் உண்மையே. ஆனால் மூன்றாம்சங்ககால முடிவில் இரண்டாம் உக்கிரப்பெருவழுதி ஆண்டி ருந்த காலத்திலேயே களப்பிரர் படை எடுப்பும், அரசியற் போராட்டங்களும், சமணசமய எழுச்சியும் ஏறக்குறைய 150 வருடங்கள் இடம் பெற்றிருந்தாலும், மீண்டும் பாண்டியர்களான முற்கால வரகுணர்கள் தம் ஆட்சிகளை உறுதிசெய்து ஆண்டிருந்தனர். இத்தகையதொரு அந்நியப்படையெடுப்புக்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவே அரிமர்த்தன பாண்டியன் (கி.பி 265-310) அமைச்சரான மாணிக்கவாசகரைக் குதிரைகள் வாங்கப் பெருந்துறைக்கு அனுப்பியிருந்தான் எனக் கருத முடிகிறது. இதனை வாதவூரர் புராணம், பெருந்துறைப்புராணம் முதலானவையும் குறிப்பிட்டுள்ளன. எனினும் கி.பி 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அடிகளின் காலத்தில் பௌத்தமே அதிம் மேலோங்கியிருந்தது. இக்காலத்தில் எழுதப்பட்டிருந்த மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய பௌத்தமத கருவினைக் கொண்ட நூல்களிலிருந்து, இக்காலத்தில் பௌத்தம் காஞ்சி, காவேரிப்பூம்பட்டினம் முதலான நகரங்களில் செல்வாக்குடைய மதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கமுடிகின்றது ஆனால் களப்பிரர் கி.பி 340 முதல் 520 வரை முற்றாகப் பாண்டி நாட்டைத் தம் வசம் வைத்திருந்தனர். அதனால் இக்காலம் தமிழக வரலாற்றில் மிகுந்த அரசியற் போராட்டக்களமாக இருந்துள்ளது என்பது புலனாகும். அப்பொழுது இறையருளினால் மூர்த்திநாயனாா் கி.பி 520இல் களப்பிரருக்கு எதிராகப் போரிட்டு நாட்டை மீட்டு கி. பி 575 இல் பழைய பாண்டிய தலைமுறையினரிடம் கையளித்திருந்தார். இதனைக் கல்லாடம், இறைவன் கருநாட அரசனை நெடுந்துயிலில் தள்ளி வாரிசில்லாமற்பண்ணி, சடை, உருத்திராக்கம், நீறு முதலானவற்றை மூர்த்தி நாயனாரை அணியச்செய்து ஆட்சிபுரியவைத்ததனால் புறச் சமயங்களிலிருந்து மன்னுயிர்களைத் காத்த கடவுள் (செய் 54) எனக் குறிப்பிடும். இதுபற்றி எதுவும் காலத்தால் முற்பட்ட மாணிக்கவாசகர் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால் மூர்த்திநாயனாரைக் குறிக்கத் தவறியிருக்கமாட்டார் என்பது உறுதி. இவ்வாறு இக்காலத்தில் பாண்டிநாட்டில் மூர்த்திநாயனார் ஆள்கையில் சோழநாட்டில் புகழ்ச்சோழரும், தொண்டைநாட்டின் ஒரு பிரிவான களத்தூரில் கூற்றுவநாயனாரும் ஆண்டிருந்தனர். மேலும் சேரலன் (கி.பி. 510-570) சேரநாட்டையாண்ட காலத்தில் கூற்றுவநாயனாருக்கு முடிசூட்ட மறுத்த தில்லைவாழ் அந்தணர்கள் இவனிடம் அடைக்கலம் புகுந்த வரலாறும் இங்கு நினைவு கூரத்தக்கது. ஆனால் கூற்றுவநாயனார் (கி. பி 510-570) இறையடிசேர்ந்தபின் களப்பிரர் மீண்டும் படைஎடுத்தபொழுது பல்லவமன்னனான சிம்மவிஷ்ணு (கி.பி550-580) களப்பிரரை முறியடித்த பெரியவீரன் என வேளூர் பாளையம் குறிப்பிடும் (S.I.I. VOIPI52)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி630-668) எனும் பல்லவமன்னனே களப்பிரரை முற்றாகப் பல்லவ நாட்டிலிருந்து அகற்றியிருக்கையில், பாண்டிநாட்டில் பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி765-790) இவர்களை முற்றாக வெற்றி கண்டிருந்தான் என வேள்விக் குடிச் செப்பேடு குறிப்பிடும். இவ்வாறு பிற்காலம் வரை களப்பிரர் தமிழகத்தில் அரசியற் தலையீடுகள் செய்திருக்கையில் மாணிக்கவாசகர் களப்பிரரை மட்டுமன்றி பின் தமிழகத்தின் ஆட்சியில் நிலையூன்றிவிட்ட பல்லவர்கள் பற்றியும் அவர் ஏதும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் அவர் பழம்பாண்டியர்கள் காலத்தில் வாழ்ந்து அவர்களுக்காகச் சிவன் செய்த திருவிளையாடல்களையே நினைவு கூர்ந்து பாண்டி நாட்டைப் போற்றியிருந்தார். அதனாலே

"மகேந்திரன், தென்னன், பெருந்துறையான்
வேடுரு ஆகிம கேந்திரத்து மிகுகுறை வானவர் வந்துதனை
தேட இருந்த சிவன்" (திருவார்த்தை)
"பாண்டி நாடே பழம் பதியாகவும்" (கீர்த்தி - வரி 115)
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த"
(திருவம்மானை 62)

"உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
(கோவை 5)

"கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலி கொண்ட" ( திரு அம்மானை வரி 47-48)
"தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை"
(மு.கு வரி 114)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என பழைய திருவிளையாடல்களையே நினைவுகூரும் சூழலில் வாழ்ந்தவராவர்.
அதனாலே,

'நரகொடு சுவர்க்கம் நானிலம்

புகாமல் பரகதி பாண்டியர்க்கருளினை' என்று இறைவனையும் போற்றினர் எனலாம். எனவே மாணிக்கவாசகர் குறிப்பிடும்

"............வரகுணனாந்

தென்னவனேத்து சிற்றம்பலத்தான்" (கோவை. செய் 306)

வரகுணன் வெற்பின் வைத்த

கயலோங்கிருஞ்சிலை (கோவை. செய்327)

என்று குறிப்பிடுகின்ற வரகுணபாண்டியன் பழைய பாண்டியமரபில் வந்தவன் என்பதில் ஐயமில்லை.

## மாணிக்கவாசகரைப் பிற்கால வரகுண பாண்டியர்களுடன் தொடர்புபடுத்தும் ஆய்வுகள்

பிற்கால வரகுணர்களின் ஆட்சியானது பல்வேறுபட்ட வடநாட்டினர் படையெடுப்புகளின் முடிவில் ஏற்பட்டதாகும். முதலில் களப்பிரர்கள் தமிழகத்தின் மீது படையெடுத்த பொழுது மூர்த்திநாயனாரே போரிட்டு வெற்றி கண்டு பாண்டிநாட்டினை ஆண்டிருந்தார். இதன் பின்னர் பல்லவர்கள் சோழநாடு வரை ஆட்சியை உறுதி செய்திருந்தனர். அப்பொழுது பிற்கால வரகுண பாண்டியன்.I (கி.பி 792- 835) பல்லவர் வலியிழந்த காலத்தில் சோழ நாட்டைக்கைப்பற்றி ஆண்டிருந்தான். அதனால் இந்த வரகுணனைச் சின்னமனூர்ச் செப்பேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொற்றவர்கள் தொழ கழற்கால் கோவரகுண மகாராசன்" எனப்பாராட்டியிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகளும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் "பெரிய அன்பின் வரகுணதேவர்" எனப்போற்றியிருந்தனர். அதனோடு இவன் ஒரு சிவபக்தன் என்பதற்காகிய சான்றுகளாக இவன் வழங்கிய கொடைகளை, சதாசிவபண்டாரத்தார் காட்டுவர். இவற்றுள் வரகுணன் I வேம்பில் (வேம்பத்தூர்) எனும் சோழநாட்டுடன் செய்த போர் வெற்றிக்குப்பின் நியமத்தில் தங்கியிருந்த பொழுதுசிராப்பள்ளி இறைவற்கு திருவிளக்கு எரிக்க, 125 கழஞ்சு பொன்அளித்தான் என்றும், பின் பெண்ணை யாற்றங்கரையிலுள்ள அரசூரில் வீற்றிருந்தபொழுது அம்பாசமுத்திரக்கோவிலுக்கு (திருநெல்வேலிமாவட்டம்) 290பொற்காசுகள் நிவந்தமாக வழங்கியிருந்தான் என்றும் சான்றுகள் காட்டுவர். இவனது கல்வெட்டுக்கள் அம்பா சமுத்திரம், தளபதி சமுத்திரம், கழுகுமலை ஏர்வாடி ஆகிய ஊர்களில் இருப்பதனால் இத்தகைய பெருமை கொண்ட இவனையே மாணிக்கவாசகர் குறிப்பிட்டனர்என்பர். ஆனால் இவனுக்குப் பின்னர் ஆண்ட வரகுணன் II(கி.பி862-882) பல்லவர், கங்கர், சோழர் (ஆதித்திய சோழன் கி.பி 871-907) ஆகியோர் கூட்டுப்படையுடன் திருப்புறம்பியத்தில் போரிட்டுத் தோல்வியுற்றதனால் மாணிக்க வாசகருடன் இணைந்து துறவினை மேற்கொண்டனன் என கே.என். நீலகண்ட சாஸ்திரி கருதுவர்.

இவர்கள் காட்டும் அரசியற் பின்னணிகளைக் கொண்ட 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தி ருப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய சான்றுகளும் மாணிக்கவாசகரின் பாடல்களில் இடம்பெற்றிருக்கவில்லை. அதனால்களப்பிரர், பல்லவர், கங்கர் படையெடுப்புகளுக்கு முன் ஆண்டிருந்த முற்கால வரகுணனின்காலத்திலேதான்இவர் வாழ்ந்திருந்தார் என்பதே ஏற்றதாம்.

**சிலபாண்டியமன்னர்வைதீகவேள்விகத்தைவளர்த்த சூழலிலும் தமிழ் வளர்த்த பாண்டியர்களையே மாணிக்கவாசகர் போற்றியவராவர்.**

பாண்டியர்கள் மூன்றாம் சங்க காலம் முதல் வடநாட்டுப் பிராமணக் குடியேற்றங்கள் அறிமுகம் செய்தவேள்கவிளுக்கும், வடமொழிக்கும் அடிமைகளாகினார்கள். தொல்காப்பியம் "வேதங்களில் வல்லபிராமணர்" எனஇவர்களுக்கு அடைமொழியிட்டுக் கூறுவதும், இந்த வேள்விகளுக்கு அடிமைப்பட்ட முற்காலப் பாண்டியனான முதுகுடுமிப்பெருவழுதியை சிம்மனூர்ச் செப்பேடு "ஒராயிரம் வேள்வி செய்தவன்" என்றும், வேள்விக்குடிச் செப்பேடு "பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதி" என்றும், மதுரைக் காஞ்சி "பல்யாகசாலை முதுகுடுமி" என்றும் போற்றியிருப்பது சீர்தூக்கத்தக்கது. அதனோடு இவன் சுருதிமார்க்கம் தவறாத கொற்கைக்கிழான் எனும் பிராமணனுக்கு வேள்விக்குடி எனும் ஊரைத் தானமாக வழங்கியிருந்தான் என்பதனாலும், பாண்டியரில் சிலர் சிவநெறிதழம்பியிருந்தனர் என்பது புலனாம். சேரர்களும் பிராமணர்களுடைய வேள்விகளுக்கு அடிமையாகிவிட்ட நிலையைப் பதிற்றுப்பத்து விபரிக்கும். இத்தகைய சூழலில் வடமொழியும் தமிழுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிபோட்டு இடம் பிடிக்கலாயிற்று. இதனைச் சின்னமனூர்ச் செப்பேடுகள்,

'உளமிக்கி மதியதனா லொண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா னாராந்து' என்றும்

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" (கி.பி 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது) என்றும் குறிப்பிடுவதனால், இக்காலத்தில் தமிழ் தன் மண்ணிலே நிலைதளர்ந்திருந்த நிலையினை அவதானிக்க முடிகின்றது. ஆனால் சங்க இலக்கியமான புற நானூறோ

"தமிழ் கெழுகூடல் தண்கோல் வேந்தே" (செய்58)

'தண் தமிழ் பொது எனப்பொறான்' (செய் 51)

என்று பாராட்டியிருந்த நிலையானது, இக்காலத்தில் வெறும் வெற்றுச் சொற்களாக்கி விட்டிருந்தன. ஆனால் மாணிக்க வாசகரும் வடமொழிக்கு முற்றாக அடிமைப்பட்டிராத சங்க காலத்தையண்டி வாழ்ந்ததனாலே,

கூடலினாய்ந்த ஒண்டீந்தமிழ் (கோவை8)

தண்ணார் தமிழளிக்குந்தண்பாண்டி நாட்டானை (திரு அம்மானை 57) என்று உறுதியாகக் கூற முடிந்தது.

## மாணிக்கவாசகர்நினைவுகூரும்சிவபக்தர்கள் அனைவரும் காலத்தால் முற்பட்டவர்களே

பாண்டிப்பிரானாகிய சிவனால் ஆட்கொள்ளப்பட்ட நாள் முதல், இவர் அவன் புகழ்பாடும் தொண்டினையே மேற்கொண்டிருந்தார். பின்னால் சிவபக்தன் எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்படும், இராவணனைத் தண்டித்தது முதல் கண்ணப்பர், சண்டேசுவரர் முதலானோருக்கு அருளிய வரலாறுகளையும் இவர் நினைவு கூரத்தவறவில்லை. இவ்வாறு இவர் குறிப்பிடும் தென்னாட்டினைச் சேர்ந்த சிவபக்தர்கள் அனைவரும் காலத்தால் முற்பட்டவர்களே. அவற்றினை நாமும் தொகுத்துப் பார்க்கலாம். இராவணனது **பத்துத் தலைகளை** நெரித்து அருளிய வரலாற்றினை

"தேரை நிறுத்திமலை எடுத்தான் சிரம்
ஈரைந்தும் இற்றவாறு" (திருவுந்தியார் 57)
என்பதனோடு, மண்டோதரியையும்,

"ஒங்குமதில் இலங்கை அதனில் பந்தணை மெல்விரலாட்கருளும் பரிசறிவார்" (திருவார்த்தை)

"சூர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோதரி" (குயிற்பத்துவரி 6-7) என நினைவு கூர்ந்தனர். வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் தில்லைக்கு வந்து வழிபட்டிருந்தமையை

"அம்பொற்பொலி தரு புலியூர்ப் பொதுவினி னடநவில்"
(கீ.திருவகவல் 140-141)

பதஞ்சலிக்கருளிய பரம நாடக (மு.கு.வரி 138)
எனப் போற்றினர். மேலும் திருவானைக்காவில் சிவவழிபாடு செய்திருந்த யானைக்கு அருளியமையை, "அத்திக்கருளிய முத்தியெனப் (போற்றித் திருவகவல் வரி163) பாராட்டினர். கண்ணப்பரின் அன்பினைத் தன் அன்புடன் ஒப்பிட்டு தான் தகுதியற்றவனாக இருக்கையில், "கண்ணப்பர் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆண்டருளி" எனத் தன்னையும் ஆட்கொண்டானே என வியக்கின்றனர்.

இவர் கண்ணப்பர் இறைமீது செலுத்திய அன்பினை மறக்கமுடியாமல் மீண்டும்

...... வாய்க்கலசம் ஊன் அமுதம்

விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்

(திருத்தோணாக்கம் வரி 12)

என நினைவு கூர்ந்தனர்.

இவ்வாறே சண்டேசுவரரின் மணலிங்கப் பூசைக்குத் தன் பசும்பால் வீணாவதாக எண்ணித் தந்தையாகிய எச்சன் அதனைக் கால்களாற் சிதைத்த பொழுது, சண்டேசுவரர் இறைபக்தியில் உறுதிமிக்கவராய் இருந்து தந்தையின் காலைத் துண்டித்தார். இதனையே "சிவ கருமம் சிதைத்தானை" (திருத்தோணாக்கம் வரி - 26) என நினைவு கொண்டனர். திருவீழிமிழலையில் திருமால் சக்கரம் வேண்டியிருந்த வரலாற்றினை

"பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக்குறையத்

தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலும்

சங்கரன் எம்பிரான் சக்கரமாற்கருளிய (திருத்தோணாக்கம் வரி-37-39) எனக் குறிப்பிட்டருளினார். மேலும் உபமன்யுவிற்கு பால் கொடுத்து அருளியமையைப் "பாலகனார்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட கோலச்சடையர்" (திருவுந்தியார்- வரி 151) என்றெல்லாம் போற்றியிருந்த இவர் தன் காலத்தின் பின்னர் வாழ்ந்து பேயுரு வேண்டி இறைவனைப் பாடி மகிழ்ந்திருந்த காரைக்காலம்மையார் பற்றியோ, அல்லது பெருவளர்ச்சி பெற்ற ஆகமங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறு கின்ற திருமூலர் பற்றியோ, அல்லது இறையருளால் மீண்டும் பாண்டியர் ஆட்சியை மீட்டெடுத்த மூர்த்தி நாயனார், கூற்றுவநாயனார், ஆட்சிகள் பற்றியோ அறிந்திருந்தாரில்லை. மேலும் இவர்கள் காலத்தின் பின் மன்னர்களையும், மக்களையும் ஆட்கொண்டிருந்த சமண மத எழுச்சி பற்றியும் அறிந்திருந்தாரில்லை. குறிப்பாக கூன்பாண்டிய மன்னன் சமணம் தழுவியிருந்தமையை விரும்பாத அவர் மனைவி மங்கையர்க்கரசி வேண்டுதலில், அவரை மீண்டும் சைவராக்கித் தோல்வி கண்ட சமண குருமார்800பேர் கழுவேறியது பற்றியோ இவருக்குத் தெரிந்திருக்கக் காலம் வாய்ப்பளிக்கவில்லை. மேலும் சமணராய் இருந்து மீண்டும் சிவ வழிபாட்டினை மேற்கொண்டிருந்த திருநாவுக்கரசர்,

'சலம்பூ வொடுதூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" எனத் தன் உள்ளத்திற்கே அறிவுரை கூறும் நாவுக்கரசர் பற்றியும் உருகினாரல்லர். குறிப்பாக திருவீழிமிழலை இறைவனைப் பற்றிப் பாடியபொழுது, அத்தலத்து இறைவனைப் போற்றி வழிபட்டு அப்பரும், சம்பந்தரும் படிக்காசு பெற்றமையை இவர் குறிப்பிடவில்லை. ஏனெனில் இவர் தேவாராசிரியர்மற்றும் பக்தியியக்க காலத்திற்கு முற்பட வாழ்ந்திருந்தமையாலேயாம். ஆனால் அப்பரோ இவருடன்தொடர்பானதிருவிளையாடல்களை "நரியைக் குதிரைசெய்வானும்" வையைத் திருக்கோட்டில் நின்ற திறமுந்தோன்றும் என்று நினைவு கூர்ந்திருந்தனர். இது காலத்தின் கோலமேயாம். இவ்வாறு தேவாராசிரியர் அரசியற் சூழல்களும் முற்றிலும் வேறானவை. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி பின்னர் ஆராயப்படும். மாணிக்கவாசகர் காலத்தில்,பௌத்த மத எழுச்சி மற்றும் வைதீக மதம் தமிழகத்தில் ஊருடுவிச் செலுத்திய தாக்கத்தினையே இவர் அறியும் நிலை இருந்தது.அதனாலே "புத்தன் முதலாய புல்லறிவிற் பல் சமயம்" (திருத்தோணாக்கம் வரி 24) என்றும்,

விரத மேபரம்ஆகவே தியருஞ்
சரதம்ஆகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகட த்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதம் என்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித் தடித்தா ர்த்த
உலோகா யதன் எனும் ஒண்டிறற் பாம்பின் (போற்றித் திருவகவல் வரி 47-55)

"அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலன் ஏல்

திருந்தவருக் குலகியற்கை தெரியா காண் சாழலோ (திருச்சாழல்) என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தனர். இப்படியானதொரு நிலை பக்தியியக்கத்தின் பின் தமிழகத்தில் உருவாவதற்கு அவசியம் இருக்கவில்லை என்பதே உண்மை.

## பிள்ளையார், விஸ்ணு வழிபாடுகள் அறிமுகமாகிய காலம்முதலாகத் தமிழகம்

கடல்கோள்களினால் தென் தமிழ் நாடுகள் அனைத்தும் கடலுட்தாழ எஞ்சிய பகுதியான ஈழம் ஆட்சிகளை இழந்து கைவிடப்பட்டிருந்தது. அப்பொழுது ஈழத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருந்த மக்கள் பாம்பு வழிபாட்டினரான நாகர் எனப்படும் தமிழ்க்குடிகளும், பேய், பிசாசுகளை வழிபடும் இயக்கர் எனப்படும் தமிழ்க் குடிகளுமே, வாழ்ந்திருந்தனர். இவர்களோடு சிவன், முருகன் வழிபாட்டினையுடைய தமிழ்க்குடிகளும் ஆட்சிகளையிழந்திருந்தனர். காலப்போக்கில் குபேரனும், பின், இவன் சகோதரனான இராவணனும் ஈழத்தின் கிழக்குக் கரையிலும், தென்மேற்குக் கரையிலும் ஆண்டிருந்தனர். இவர்களுள் குபேரன் முருகவழிபாட்டினையும், இராவணன் சிவ வழிபாட்டினையும் மேற்கொண்டிருந்தவர்களாவர். இராவணன் இன்றைய திருச்சிராப்பள்ளியில் ஒருகோட்டையைக் கட்டித் தன் தம்பி திருச்சிரனைக் காவல் வைத்திருந்தான் என்றும், பின்னர் இராவணனை வென்ற இராமரே திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் கணபதி உருவச் சிலையையும், (இதுவே இன்றைய திருச்சி மலைக்கோட்டைப் பிள்ளையார் தலமாகும்) கோட்டையின் வட பாகத்திற் சிவபூசைப் பெட்டியையும் வைத்துப் பிரதிட்டை பண்ணி, ஸ்ரீரங்கத்தலம் எனும் விஸ்ணு வழிபாட்டுத் தலத்தையும் நிறுவினார் எனச் சோழர் பூர்வ பட்டயம் குறிப்பிடும் . இவ்வாறு தமிழகத்திற்குப் பிள்ளையார் வழிபாடும், விஸ்ணு வழிபாடும் இராமரால் அறிமுகப்படுத்தப்பெற்றதாயினும் இத் தெய்வ வழிபாடுகள் உடனடியாகத் தமிழகத்தில் மக்கள் மயமாகவில்லை. ஆனால் பல்லவர் கால ஆட்சியில் கி.பி 7ம்நூற்றாண்டளவில் நாயன்மார்களால் முன்னெடுக்கப்பட்ட பக்தி இயக்கமே பிள்ளையார் வழிபாட்டினை முதன்மைப்படுத்தியிருந்தது. இக் காலம் முதலாகவே சைவ இலக்கியங்களில் பிள்ளையார் சிவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சக்தியாகிய மூத்தபிள்ளையென்ற கருத்து சிவ வழிபாட்டுடன் இணைத்துப் போற்றப்படலாயிற்று. இது தமிழக சமய வரவாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியிருந்தது. திருமூலரைத் தொடர்ந்து, திருஞான சம்பந்தர் "பிடியதனுருவுமை கொள மிகு கரியது" எனவும், திருநாவுக்கரசர் "கைவேழமுகத்தவனைப் படைத்தார் போலும்" (திருமுறை6-திருவீழிமிழலைத்திருத்தாண்டகம்" எனவும் பிள்ளையாரை நினைவு கூரத்தலைப்பட்டனர். சுந்தரமூர்த்தி நாயனாருடனும், சேரமானுடனும் கைலாயம் சென்ற ஒளவையார் பற்றி கி.பி 8ம் நூற்றாண்டிலும், பின்னர் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படும் ஒளவையாரே "வாக்குண்டாம்", "நல்வழி" ஆகிய பாடல்களைப் பாடி, பிள்ளையார் வழிபாட்டினை மக்கள் மயப்படுத்தியிருந்தார் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

விஸ்ணு வழிபாடு தொல்காப்பியத்தில் தமிழக மாயோனுடன் தொடர்பு காட்டப்பெற்றதோடு, திருவேங்கடமும் தமிழகத்திற்குட்பட்டதாகவே காட்டப் பெற்றிருந்தது. இக் காலம் முதலாக 3ம் சங்க இலக்கியங்கள் திருமால் குன்றம் (அழகர்மலை), திருவரங்கம், திருவனந்தசயனம், திருவனந்தபுரம் முதலான விஸ்ணு கோவில்களை விஸ்ணு வழிபாட்டுத் தலங்களாக குறிப்பிடலாயின. நற்றிணையில் கடவுள் வாழ்த்தைப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் திருமாலுக்கே தன் வணக்கத்தைச் செலுத்தியிருந்தார். சின்னமனூர்ச் செப்பேடும் பாண்டியர்கள் வடமொழி இதிகாச வரலாறுகளைத் தமிழ்ப்படுத்தினர் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாபாரதம் தமிழ்ப்படுத்து மதுராபுரிச் சங்கம் வைத்தும்" எனக்குறிப்பிடுவது கவனத்திற் கொள்ளத்தக்கது. (ஆய்வுகளின் படி மகா பாரத கதாபாத்திரங்களான துரியோதனன், பாண்டவர் ஆகியோர் நாக குலத்தோர் ஆவர். ஆனால் அப்பொழுது ஆதிக்க மொழியாக இருந்த வடமொழியில் மகாபாரதம் எழுதப்பட்டிருந்த சூழலில், இவர்களின் இன அடையாளம் திரிவுபடுத்தப்படலாயிற்று என்பதும் புலனாம்) இக் காலம் முதலாகச் சைவ மரபினரான பாண்டியர்கள் திருமால் வழிபாட்டினையும் மேற்கொண்டிருந்தனர். இப் பின்னணியிலே தான் இளம் பெருவழுதி எனும் பாண்டியன் திருமாலை வழிபட்டு எழுதிய பாடல்கள் பரிபாடலில் இடம் பெற்றனவாகலாம். திரிகடுகம் எனும் நூலை எழுதிய நல்லாதனாரும் திருமால் வழிபாட்டினரேயாவார். ஐந்திணை ஐம்பதில் சிவன், முருகனுடன் திருமாலும் போற்றப்படுகின்றார். சிலப்பதிகாரமும் (காதை 2 வரி 128-130) சிவனுக்குரிய ஐந்தெழுத்தினையும், திருமாலுக்குரிய எட்டெழுத்தினையும் சமமாகக் குறிப்பிடும். மேலும் இச் சமரச நிலை ஏற்பட்ட நிலையிலேயே சேரன் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரைக்குப் புறப்படுமுன் சிவபூசை செய்து வந்த சிவப்பிரகாசத்தைத் தன் முடியிலும், பின் வந்த திருமால் பிரசாதத்தைத் தன் தோளிலும் தாங்கினான் (காதை 26 வரி -62-67) என்பதனால், சைவர்கள் விஸ்ணு வழிபாட்டினையும் ஏற்று இறைவனை எங்கும், எதிலும் கண்டு மகிழ்ந்தனர் எனலாம். ஆனால் மாணிக்க வாசகர் திருவீழிமிழலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர்பூக் குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சங்கரமாற் கருளிய"
(திருத்தோணக்கம் வரி 37-39) எனத் திருமால் சக்கரம் வேண்டிச் சிவனை வழிபட்டமையே குறிப்பிடுவர்.

**மணிவாசகருக்குக் காலத்தால் பிற்பட்டிருந்தவர்களான திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் குறிப்பிடும் சமய அரசியல் நிகழ்ச்சிகள்**

பழுத்த அனுபவமும், பாராட்டும் உள்ளமும் கொண்ட திருநாவுக்கரசர் மாணிக்கவாசகருடன் தொடர்பான திருவிளையாடல்களைப் போற்றி மகிழ்ந்திருந்தனர்.

"நரியைக் குதிரை செய்வானும்"

(திருமுறை 4- திருவாரூப்பதிகம் 42)

"வையத்திருக் கோட்டில் நின்ற திறமுந்தோன்றும் (திருப்பூவணந்தேவாரம்)

"குசையு மங்கையிற் கோசமுங் கொட்டவவ்
வசையின் மங்கல் வாசகர் வாழ்த்தவே"

(திருவிசைய மங்கைத் தேவாரம்)

என மணிவாசகருடன் தொடர்பான திருவிளையாடல்களை நினைவு கூர்ந்தனர். மேலும் இவர் மாணிக்கவாசகரே நந்திதேவரின் அவதாரம் என்று கருதி "குடமுழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார்" (தனித்திருத்தாண்டகம் ) என்றும் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன் பழ அடியார் கூட்டம் அடியேன் காண
ஆசைப்பட்டேன்
தன் னடியரிற் கூட்டிய அதிசயங்கண்டோமே'.
(அதிசயப் பத்து)

என்பதனால் முற்பிறப்பில் ஆயிரம் அடியார்களில் ஒருவராக இருந்து, கவனக் குறைவால் இப்பிறப்பை எடுக்க நேரிட்டது என்பர். கூன் பாண்டியன் சமணம் மாறியிருக்கையில் துயரடைந்த பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி திருஞானசம்பந்தரின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு அவரை மதுரைக்கு அழைத்திருந்தார். அப்பொழுது சம்பந்தரின் வருகையையறிந்த சமணர் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். பாண்டிமாதேவியின் உறுதி கண்ட சிவனும் அத்தீயைப் பாண்டியனுக்கு வெப்பு நோயாக மாற்றியிருந்தான். அப்பொழுது மன்னன் துயர்கண்டு, மன்னனின் நோயை மாற்றியருளும்படி சம்பந்தரிடம் பாண்டிமாதேவி வேண்டி நின்றபொழுது, சம்பந்தர் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி வெப்புநோயை நீக்கியதோடு, பிறவிப்பிணியாகிய கூனையும் நீக்கி, நின்ற சீர்நெடுமாறனாக உருவினையும் மாற்றியருளினார். அதனாலே மங்கையர்க்கரசியின் பணியைப் போற்றும் வகையில் சம்பந்தர்

"மங்கையர்க்கரசி . . . .

பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாள் தொறும் பரவ" எனப் பாடியிருந்தார். இக்காலம் முதலாகப் "பாண்டி நன் நாடர்" (அன்னைப்பத்து) "தென்பாண்டி நாடனைக் கூவாய் (குயிற்பத்து) எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனைப் பாராட்டும் நிலை தமிழகத்தில் தளர்ந்த நிலையினையே சமய வரலாறுகள் உணர்த்துகின்றன.

இவ்வாறே பல்லவ நாட்டிலும் மகேந்திரவர்மன் (கி.பி 610-640) சைவம்விட்டுச் சமணம் நீங்கியிருந்தான். பின் திலகவதியாரின் இறைஞ்சுதலினால் மீண்டும் சைவனாகிய திருநாவுக்கரசரைத் துன்புறுத்த மகேந்திர வர்மனும், சமணரும் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியுற, மகேந்திரவர்மன் மீண்டும் சைவனாகிச் சைவத்தை ஆட்சிமதமாக்கி மக்கள் வழிபாட்டிற்காகப் பல சைவாலயங்களை எடுப்பித்தான். இக்காலம் முதலாகவே மீண்டும் சைவம் வளர்க்கும் பணியைப் பல்லவர்கள் முன்னெடுத்திருந்தனர். தேவார ஆசிரியர்களில் பல்லவர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த சுந்தரர் பல்லவ மன்னர்களையே தன் தேவாரத்தில் குறிப்பிட்டிருந்தார். இவர் தன் திருக்கச்சிமேற்றளிப் பதிகத்தில்,

''பாரூர்பல் லவனூர் மதிற்காஞ்சி மாநகர் வாய்'' என்கையில், மணிவாசகரோ காஞ்சியில் இறைவன் தவமிருந்த அம்மையைத் தழுவி இடப்பக்கத்தில் அமர்த்திக்கொண்ட திருவிளையாடலையே

"ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்" என

நினைவு கூர்ந்தர். அவ்வாறே பொன்னம்பலம், தில்லை எனப் போற்றப்பட்ட சிதம்பரத்தில் நிற்கையில்,

"பொன்னம் பலத்தாடும் அமுதே"

(கோயில் மூத்த திருப்பதிகம் வரி 17)

"இமயத்தியல் புடை அம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினிடை நவில்"

(கீர்த்தித் திருவகவல் வரி 140-141)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருக வென

(மு.கு வரி 126-127)

என இக் கோவிலின் பழைய நிகழ்ச்சிகளையே நினைவு கூர்ந்தனர். ஆனால் சுந்தரர் சிதம்பரத்தில் நின்று இறைவனைப் போற்றுகையில்,

"உரிமையாளர் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கச் செய்யும்" என்றும், திருத்தொண்டர் தொகையில் " காடவர் கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்" எனப் பல்லவ மன்னன் மூன்றாம் சிம்மவர்மனைக் (கி.பி 685- 710) குறிப்பிட்டிருந்தார். ஏனெனில் இக் காலத்தில் சிதம்பரம் முதலான சோழநாட்டுப் பகுதிகள் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்தமையினாலேயாம். ஆனால் அடிகள், பல்லவர் ஆட்சிகளை அறிந்திராத நிலையில், பல்லவர் பற்றிக் குறிப்பிட்டாரில்லை. ஆனால் சிவன் கலைகள் வளரும் சந்திரனை அணிந்திருப்பவர் எனும் பெருளில் " கலையார் அரிகேசரியார்" என்று போற்றியிருக்க, இவர் பாண்டிநாட்டையாண்டிருந்த கூன் பாண்டியனின் மறுபெயரான மாறவர்மன் அரிகேசரி எனப்படும் பாண்டிய மன்னனைக் குறிப்பிட்டார் என்று கருதுவாரும் உளர்.

## கோவையை முதன் முதலாக இறைநூல் என அடையாளப்படுத்திய கல்லாடர் காலம் யாது?

திருக் கோவையாரைப் பாடவைப்பதற்காக இறைவன் மாணிக்க வாசகரைத் தில்லைக்கு வரும்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்திருந்தனர். இதனை

"நாயினேனை நலமலிதில்லையுட்

கோலம் ஆர்தரு பொதுவினில் வருகவென" (கீர்த்தித் திருவகவல் வரி 126 -127 )

எனக் கூறுவதன் மூலம் உணரலாம். இவர் இறைவன் அழைப்பின் பேரில் தில்லைக்குச் சென்றிருந்த சமயம், அந்தணர் ஒருவர் தனக்கு நிகழ்ந்த அற்புதங்களைக் கூறி, "பாவை பாடிய வாயால் கோவை பாட வேண்டும்" என்று வேண்டியிருந்தார். அப்போது தன் மானிட உணர்வுகளையிழந்து தில்லைச் சிற்றம்பலவானனே ஆனார். இந்நிலை ஏற்பட்டதனை, "எனை நான் என்பதறியேன் பகல் இரவாவதும் அறியேன்

மனவாசகங்கடந்தான் எனை மத்தோன் மத்தன் ஆக" (உண்ணிப்பத்து செய் -3) எனப் பின்னர் கூறுவதிலிருந்து உணரலாம். இந் நிலையேற்பட்டபோது மாணிக்கவாசகராற் பாடப்பட்ட கோவையை எழுதி முடித்த அந்தணர், அந்த ஏட்டினைக் கட்டிக் கொண்டு மறைந்தருளினார். இதில் இறைவனாகிய சிற்றம்பலவனைப் பாட்டுடைத் தலைவனாகவும்,தலைவியாகிய தன்னைக் களவுப்புணர்ச்சியிலான இன்பத்தின் மூலம் ஆட்கொள்ள வேண்டுமென இரு பொருள் பொதித்த 400 சிலேடைப் பாடல்களால் பாடியிருந்தார். அதாவது உலகம் உயிர்களுடன்தொடர்ந்து இயங்குவதற்கு அடிப்படையான காம இச்சையே உலகோர் மீதூரப் பெற்றிருப்பது போல், இறைவனை அடையவும் தீவிர பக்தி அவசியம் என இருபொருள் கொண்ட நூலே கோவையாகும். இதுவே தமிழர் போற்றிவரும் அகத்துறையாகும் "ஒண்டீந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின்துறை" எனக்கோவை (செய்யுள்5) இதனையே குறிப்பிட்டதாம். அகத்துறையின்படி ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடிப் பெறுமின்பமானது சொற்களால் உணர்த்தப்பட முடியாததாய் உள்ளத் துணர்வாக அமையும் என்பது பொருளாகும். இவ் விதமே இறையின்பத்தை அனுபவித்தோர் நிலையும் சொற்களால் வர்ணிக்க முடியாத உள்ளத்து உணர்வேயாம். இதனை உணர்ந்து கொள்ளப் பக்குவமற்றோரே கோவையைக் காமஞ்சான்ற பனுவல் என்றனர். இது மாணிக்க வாசகருக்கு மட்டுமல்லாமல் திருவிளையாடலைச் செய்திருந்த இறைவனுக்கும் கொடுத்த சாட்டை அடியாகும். இவ்வாறு கோவையைக் காமநூல் என்று சொல்லி இழிவுபடுத்தியோருக்கு, இதன் உள்ளார்த்தத்தைப் புரியவைக்கும் பணியில் கல்லாடர் கோவையிலிருந்து நூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்து, அதனுள் பொதிந்து கிடக்கும் இறையன்பின் மேலீட்டைப் புலனாகும் படிச் செய்து அரங்கேற்றிய நூலே கல்லாடமாகும். அப்பொழுது மாமதுரை ஈசர் தம் திருமுடியை ஒவ்வொரு பா முடிவிலும் அசைத்து மனமகிழ்ந்திருந்தார். என ஒரு வெண்பா குறிப்பிடும்

'கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச் -சொல்லாயும்
மாமதுரைஈசர் மனமகிழ்ந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறுதரம்' என்பதே அவ்வெண்பாவாகும்.

கோவை மட்டுமன்றி, மணிவாசகர் பாடிய திருவாசகம், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி எனும் பகுதிகளிலும் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தேபாடியிருந்தார். ஆயினும்இந்நிலையிலிருந்து விடுபட்டு உலகியல் நிலைக்கு வருகையில் சிற்றின்பங் களால் தாக்குண்டிருக்கையில், அவற்றினின்றும் விடுவித்துக் கொள்ள முயன்ற நிலையே திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகியவற்றில் புலனாகின்றன எனலாம் ஆனால் கீர்த்தியிலும்,திருவண்டப் பகுதியிலும் இறைவன் உயிர்களை ஆண்டருளும்திறமேகிளர்ந்தோதப்படுகின்றது. போற்றியில் தம்மையும் ஆண்டருளும் படி விண்ணப்பம் செய்யும் குழைவுகளே மேலோங்கியிருந்தன. இவ் விருநிலைகளிலும் இறைவனே உயிர்களுக்குப் பற்றுக்கோடானவன் என்பதும், அவனையடைந்து பிறப்பு இறப்புகளிலிருந்தே விடுதலை பெறுதலே உயிர்களின் இலக்காகும், என்பதும் உணர்த்தப்பட்டிருந்தன. ஆனால் திருக்கோவையாரிலும் இவையே பேசப்பட்டதனால் கல்லாடர் இதன் ஞானக் கிடக்கையை வலியுறுத்துவதற்கு தடைக்கல் எதுவும் இருக்கவில்லை. ஆனால் சைவ உலகம் கோவையைப் புறம் தள்ளியது போல், கல்லாடத்தையும் திருமுறைகளில் இடம்பெறச் செய்யவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இனி மாணிக்க வாசகரின் காலத்தை வரையறை செய்ய உதவும் வகையில் கல்லாடத்தின் காலம் எதுவென்று அடையாளப்படுத்துவதும் அவசியம். இந்நூலில் மூன்றாம் தமிழ்க் கெழுகூடல் புலவர்கள் 49 பேர் பற்றிய குறிப்புண்டு (செய் 62). மற்றும் முருகப்பெருமான் சூரபத்மனை வென்ற வரலாறு (செய் 69,71,41), பாண்டிய குலத்திற்கு முதலாகிய உக்கிரகுமாரனைச் சோமசுந்தரக் கடவுள் அவதரிக்கச் செய்த வரலாறு (செய் 74), காரைக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் பற்றிய குறிப்பு (செய்.74), பாண்டியனோடு போரிட்ட சோழனிடமிருந்து பாண்டியனை இறைவன் காப்பாற்றியமை (செய்79), கருநடஅரசனுக்கு வாரிசில்லாமற் பண்ணி மூர்த்தி நாயனாரை (கி.பி 520) மதுரைக்கரசனாக்கி சமணத்தினின்றும் மன்னுயிர்களைக் காத்தமை (செய் 54),

தேரான் தெளிவுந் தெளிந்தான் கண்
ஐயுறவும் தீரா இடும்பை தரும் (குறள் 510), (செய் 59)

எனும் வள்ளுவரின் குறளைக் கையாண்டமை, சூரபன்மனின் இருக்கையாகிய மகேந்திரமெனும் ஊர் ஏழ்கடலால் சூழப்பட்டதென்ற வருணனை பழைய குமரிக்கண்டத்தினை நினைவு கூர வைத்தல் (செய் 60) சமணர்க்குரிய பழைய வேடத்துடன் வாழ்ந்தாலும், சாக்கியமுனிவர் சிவ வழிபாட்டினை நெஞ்சிற் கொண்டு கல்லாகிய மலர்களைச் சாத்தி வழிபட்டவர் (செய் 65) என்பன போன்ற கி.பி 6ஆம் நூற்றாண்டிற்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதோடு, புதிய பிள்ளையார் வழிபாட்டினையும் வாழ்த்துப் பாவில் தெரிவித்திருந்தார். அதனோடு சிவனது 64 திருவிளையாடல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத் திருவிளையாடல்கள் அனைத்தும் சம்பந்தர் காலத்துடன் (கி.பி 601 -650) முடிவடைவதாகத் தெரிகின்றது. கல்லாடரும் பல்லவர் ஆட்சிகள் பற்றி எதுவும் குறிப்பிட்டாரில்லை. மேலும் கல்லாடத்தில் இடம் பெறும்

"பரிபுரக் கம்பலை யிருசெவியுண்ணும்
குடக் கோச்சேரனிடம், பாணனிசை பத்திமையாற்
பாடுதலும் திருமுகப் பாசுரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தனுப்பப்பட்ட குடக்கோச்சேரனை கி.பி 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த சேரமான் என அடையாளம் கண்டு, கல்லாடம் கி.பி 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கனகசபைப்பிள்ளை, வெங்கையா, கோபிநாதராயர், அநவரதவிநாயகம்பிள்ளை முதலானோர் கருதுவர். ஆனால் சேரமன்னரின் பொதுப்பட்டப் பெயரான 'குடக்கோச்சேரன்' இமயம் வரை சென்று வெற்றிக் கொடிகளை நாட்டிய குடக்கோசேரனை இது குறிப்பிடுவதாக ஏன்? இருக்கமுடியாது என்ற வினாவும் இயல்பானதாகும். குடக்கோ இளஞ்சேரலாதனையும் இது குறிப்பிடலாம் என்று கருதமுடிகின்றது. அதனோடு இச்சேரமன்னனையே பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, மணிமேகலை முதலான நூல்கள் பாராட்டியுள்ளன. எவ்வாறாயினும் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணமும், சேக்கிழாரின் பெரியபுராணமும் சில விடயங்களில் முரணான செய்திகளைக் கூறுவதனால் வரலாற்றுக் குழப்பம் இயல்பானதே.

மாணிக்கவாசகர் தேவாராசிரியர்களுக்கு முற்பட்டவர் என்பதற்கு கி.பி 7-8ம் நூற்றாண்டினைச் சேர்ந்த பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரையெழுதியிருந்தார் என்பதும், ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கோவை பற்றிக் குறிப்பிடுகையில்,

"திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வ ராயின ராதலி
னுறிவனூற் பொருளு முலக நூல் வழக்குமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருபொருளு நுதலி யெடுத்துக் கொண்டனர்" என்பர். ஆனால்வேறு சிலர் இது நச்சினார்க்கினியார் குறிப்பென்பர். ஆனால் நச்சினார்க்கினியர் பிறநூல்களுக்குளழுதிய உரை களுக்கும், திருக்கோவையாருக்கு எழுதிய உரைக்கும் மொழிநடை, சொல்லாட்சி வேறுபாடுகள் அவதானிக் கப்பட்டுள்ளன. அதனோடு நச்சினார்க்கினியர் உரை வகுத்த நூல்களைக் குறிப்பிடும் வெண்பா கோவையைக் குறிப்பிடாமையினாலும், திருக்கோவையாருக்கு உரையெழுதியவர் பேராசிரியர் என்றே பிரயோக விவேக நூலார் கூறுவர்.

## மாணிக்கவாசகர் குறிப்பிடும் சிவதலங்கள் அனைத்தும் பழமை வாய்ந்தவையே.

தமிழக சிவதலங்களின் தோற்றமானது வரலாற்றிற்கு முற்பட்ட காலத்து மன்னனான முசுகுந்தசக்கரவர்த்தி எனும் சோழ மன்னன் உளிகளால் உருக்கற்பிக்கப்படாத தெய்வத்திருமேனிகள் ஏழினை இந்திரனிடமிருந்து பெற்று வந்து, தமிழகத்தில் பதித்து வழிபட்டிருந்தான் எனக் கந்தபுராணம், மணிமேகலை காதை[1], கலிங்கத்துப்பரணி, பாடல் 189 என்பன குறிப்பிடுவதிலிருந்து பின்னோக்கிப் பார்க்கமுடிகின்றது. இவற்றுள் ஒன்றான திருவாரூர்த் தலத்தினை அடிகள் தரிசித்துப் பாடியிருந்தார்.

அடுத்து இப்பிரபஞ்சத்தின் மையமெனக் கருதப்படுகின்றதில்லை மூதூரில் (சிதம்பரம் அல்லது பொன்னம்பலத்தில்), சிவன் நடனமாடினார் என்பதனை அறிந்த வடநாட்டினரான பதஞ்சலிமுனிவர், வியாக்கிரபாதர் ஆகியோர் வந்து பூசித்திருந்தனர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறும், சிவவழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகத் தில்லையை அடையாளப்படுத்துவதும் மிகப் பழைய வரலாறாகும். இப் பழைய வரலாறுகளையே மாணிக்கவாசகர் "பதஞ்சலிக்கருளிய பரம நாடக என்றும், இமயத்தியல்புடைய அம்பொற் பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்" எனவும் போற்றியிருந்தனர். அதனோடு திருவீழிமிழலையில் திருமால் சக்கரம் வேண்டிச் சிவனை வழிபட்டிருந்தமையும், கோவிந்தர் சிலையொன்று தில்லை முன்றலில் இருந்ததென்பதனையும் குறிப்பிடுவார். (கோவை செய் 86) ராமர் அறிமுகம் செய்த விஷ்ணு வழிபாட்டுடன், சிவன்தலத்தில் கோவிந்தர் சிலை நிறுவப்பட்டிருக்கலாம். ஆனால் கி.பி 8ம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் எனப்படும் சேரமன்னனும், கரிகாற்சோழன் எனும் சோழ மன்னனும் (பிற்காலத்திலும் கரிகாற்சோழன் எனும் பெயருடன் ஒரு சோழ மன்னன் இருந்துள்ளான் என்றும் அறியமுடிகின்றது). சிதம்பரத்திற்குத் திருப்பணிகள் செய்கையில் சிதம்பரேசுவரர், சிவகாமியம்மன் திருமேனிகளுடன் சுப்பிரமணியர், வள்ளி -தெய்வானை, விக்னேஸ்வரர், சூலதேவர், சுந்தரப்பெருமாள் ஆகிய திருமேனிகளும் பிரதிட்டைபண்ணிக் குடமுழக்குச் செய்தனர் எனச் சோழர் பூர்வ பட்டயம் குறிப்பிடும். ஆனால் பிற்காலத்தில் குலோத்துங்கன் II (கி.பி 1132 -1150) தன் திருப்பணிகளுக்கு இடையூறாக இருந்த கோவிந்தர் சிலையை அப்புறப்படுத்தினான் என்பதனால் சிவதலங்களில் வைணவத்தை இவன் கலக்க விரும்பவில்லை என்பது புலனாம். எனவே இவையனைத்தும் வடநாட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்குடன் கூடிய புதிய வளர்ச்சி நிலைகளையே எடுத்துக் கூறுவனவாம். ஆனால் மாணிக்கவாசகர்,

தில்லையோன் சேயெனச்சின வேலொருவன்
(கோவை82)

'புலியூர்ப் புனிதன்' (கோவை182)
'சிற்றம்பலத்தான்' (கோவை306 )

போன்ற சிவனின் பழைய நிலைகளையே போற்றியிருந்தனர். சுந்தரர் காலத்தில் சிதம்பரம் உட்பட்ட பகுதிகள் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இந்த அரசியல் பின்னணிகளையும் இவர் அறிந்திருக்கவில்லை. மேலும் இவர் குறிப்பிடும் ' நந்தம்பாடியும்' (ஈசனுக்குப் பூசனை புரியும் பொதுத்தலம்)சிதம்பரத்தின் பழைய பெயர்களில் ஒன்றேயாம்.

இவற்றோடு இவர் குறிப்பிடும் அனைத்துக் கோவில்களும் மிகப்பழமையானவையேயாம். அவிநாசி (கொங்குநாட்டுக் கோவில்), ஓரியூர்,(சேர நாட்டுக் குறுநில மன்னன் பெயரால் அழைக்கப்படும் கோவிலாகும்) பழனம் - பழனியையும்,துருத்தி- குற்றாலத்தினையும்( இது மாயவரக் குற்றாலமாகும்) தேவூர் - நாகபட்டினத்திலுள்ள தேவூரையும்,பனையூர் - மன்னார் குடியிலுள்ள பனையூரையும்,கழுகுமலை -திருக்கழுக்குன்றத்தினையும்,திருவாஞ்சியம் - நன்னிலம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவாஞ்சியத்தினையும், ஏகாம்பரம் - காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பர நாதரையும், ஐயாறு -திருவையாற்றினையும் சீர்காழி -சீர்காழித்தலத்தினையும்,கடம்பூர் - கடம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலத்தினையும்,முதுகுன்றம் -வடமொழிப்படுத்தப்பட்ட விருத்தாசலத்தினையும் , ஆனைக்கா - திருவானைக் காவினையும், அண்ணாமலை - திருவண்ணா மலையினையும், சிராப்பள்ளி - திருச்சிராப் பள்ளி யினையும், இடைமருது -கும்பகோணத்திலுள்ள திருவிடை மருதினையும், ஆருர் -திருவாரூரையும், பூவணம் - சிவகங்கை மாவட்டத்திலுள்ள புஷ்ப வனேசுவரரையும் ஈங்கோய்மலை- குழித்தலைத்தாலுகாவிலுள்ள திருவிதாங்க மலையையும்,குறிப்பிடுவர். இவையனைத்தும் தமிழகக் கோவில்களாக இருக்கக் கலிங்க நாட்டுப் பழங்கோவில்கள் சிலவற்றையும் இவர்குறிப்பிடுவதும் சீர்தூக்கத்தக்கதாகும்.

பஞ்சப்பள்ளி, கல்லாடம் என்பன கலிங்கநாட்டைச் சேர்ந்தனவாம். கலிங்கத்தைச்சேர்ந்த வத்ச நாட்டின் உட்பிரிவுகளாகிய மதுரைமண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம் ஆகிய பகுதிகளில் தமிழக்குடிகள் வழிவந்த நாகர் குறுநில அரசுகளே ஆண்டுவந்தனர் என்பதனால் இத்தலங்களிலும் தமிழகக் கோவில்களுடைய சிவவழிபாட்டு மரபுகளின் செல்வாக்கினை அளவிடமுடியும். (கா. கோவிந்தன் கலிங்கம் கண்ட காவலர் பக் 40 -41)

கல்லாடத்துக் கலந்துஇனி தருளி
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்
பஞ்சப் பள்ளியில் பால்மொழி தன்னொடும்

என்கையில், இங்கும் சிவ -சக்தியின் படைப்புத் தத்துவத்தின் அகத்துறை அடிப்படையிலே கூறிமகிழ்கின்றார். இக் கல்லாடம் கலிங்கத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதலமாயினும் அது எங்கிருந்தது என்பது அடையாளப்படுத்தப்படாத நிலையில், மாணிக்க வாசகர் காலத்தால் முற்பட்டவர் என்ற கருத்தும் உறுதியாகின்றது. இது தொடர்பாக ஜி. யு. போப் குறிப்பிடுகையில் பல சிவ தலங்களைக் கொண்டிருந்த மகேந்திரமலைகடலுட்தாண்டு போனது என்றும், அவை கலிங்கத்தின் பிருகாம் பூரூக்குத் (Behampore) தென்மேற்கிலிருந்தன என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கதாம்.

இனி இவரைத் தடுத்தாண்ட இறைவன் திருவைந் தெழுத்தினை (நமசிவாய) முதலில் இராமநாத மாவட்டத்திலுள்ள உத்தர கோசமங்கையிலும், சிவாயநம எனும் சிவசிந்தனையைக் கோகழிலும் கலக்கம் தீர உபதேசித்தனர் என்பது, இவரை இறைவன் ஆட்கொண்ட நெறிபற்றியதாம். ''கோகழியாண்ட குருமணிதன் வாழ்க'' என்று இவர் திருவாவடுதுறையையே குறிப்பிட்டார் என்பதற்கு திருவாவடுதுறை வரலாறும் சான்றாகஉளது. திருவாவடுதுறைஎனும்பெயர்கோகழிக்கு இருந்ததென்பதனால் இது உறுதியாம். எனினும் கோகழி எனும்சமய மடம்முதலில் நருமதையாற்றங்கரையிலிருந்த குன்றின் மீது இருந்ததென்றும், பின் தமிழ் நாட்டிலும் நிறுவப்பட்டதென்றும் வரலாற்றுக்குறிப்புகள் அவதானிக்ப்பட்டுள்ளன. மேலும் இக் கோகழியிலே திரு மூலர் ஆகமங்களின் உட்பொருளைத் தமிழில் வடித்தார் என்பதனாலும், திருவாவடுதுறையில்வடிக்கப்பெற்ற ஆகமங்களுக்கு முந்திய வரலாறு ஒன்றினை மாணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் கூறுவதனால், இவர் காலம் புலனாம். மேலும் மாணிக்கவாசகர் குறிப்பிடும்,

'செந்நாவலர் பரசும் புகழ்த்திருப்பெருந்துறை உறைவாய்'
(உயிர் உண்ணிப்பது)

எனும் சொற்றொடர் திருநாவுக் கரசரைக் குறித்துப் பாடியதுஎன்று கருதுவாரும் உளர். திருநாவுக்கரசர் திருப்பெருந்துறைப் பெருமானை பாடினாரல்லர். எனவே இது பொதுவாகஇறைவனைப் பாடித்துதிக்கும் பண்ணிசையாளர் பற்றிய குறிப்பன்றி, நாவுக்கரசர் பற்றியதன்று. மேலும்,

"வேதமுதல் விண்ணோடு மண்ணுந்துதித்தாலும் ஒத உலவா ஒரு தோழன் தொண்டருளன்" என்ற தொடரும் தேவராசிரியரைச்சுட்டும் என்பர். மாறாக, இங்கு அவர் தன்னையே சுட்டினாரவர். இதுபோன்று தன்னையும், இறைவனையும் மிக நெருக்கமாகப் பலமுறை சுட்டியுள்ளார். தன்னை ஆட்கொண்ட இறைவனை நோக்கி,

"பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப்
பணிகொண்டாய்" (திருச்சதகம் வரி-214)

"கட்டறுத்தெனை ஆண்டு கண்ணார நீ
றிட்ட அன்பரொடி யாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை (மு.கு வரி - 197 -199)

"கொற்றக் குதிரையின் மேல் வந்தருளித் தன்அடியார்
குற்றங்க ளீக்கி" (திரு அம்மானை வரி 116-117)

என பலவாறாகத் தொடர்புபடுத்தியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நாம் அடிகள் குறிப்பிட்ட **சிவதலங்களின்** வரலாற்றினை நாம் ஆராயும்பொழுது, அவையாவும் பழமைமிக்க தலங்களே. மகேந்திரப்பள்ளி, மிழலை, இடவை, பட்டமங்கலம் போன்ற இடங்களை அடையாளப்படுத்துவதில் ஆய்வாளர்கள் இதுவா? அதுவா? எனச் சந்தேகிக்கும் நிலையிலேயே இருந்துள்ளனர். இன்னும் சில ஊர்கள் வழக்கற்றுப்போனதாலும், இவற்றின் பழமையே இதற்குக் காரணமாகும். எனினும் அடிகள் குறிப்பிட்ட பெருந்துறை, கடம்பூர், பனையூர், கோகழி, பூவணம், தேவூர், ஆரூர், தில்லை, சீகாழி, மறைக்காடு முதலான கோவில்கள் பிற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த நிலையிலே அப்பர், சம்பந்தர் இருவரும் இக் கோவில்களில் பிரதிட்டை பண்ணியிருந்த இறைதிருமேனிகளைப் போற்றி வழிபட்டவராவர். இவ்வாறு அடிகள் குறிப்பிட்ட **சிவதலங்கள் 54ஆக இருக்க** தேவாராசிரியர்கள் ஏறக்குறைய 300ற்கு மேற்பட்ட சிவதலங்களைப் பாடக் காலமே வழிவகுத்திருந்தமை புலனாம். தேவார ஆசிரியர்கள் **சமணசமயம் சார்ந்த மன்னர்களை மீண்டும் சைவத்தை ஏற்** செய்து, சமணசமயத்திற்கு எதிராகப் பக்தியியக்கத்தினை முன்னெடுத்திருந்தனர். அப்பொழுது பல்லவ மன்னர்கள், சேரமான் பெருமாள் ஆகிய மன்னர்கள் கோவில்களைத் தொடர்ந்தும் எழுப்பியிருந்தனர். குறிப்பாகப் பல்லவர்கள் கற்பாறைகளைக் **குடைந்தும்** கோயில்களை எழுப்பியிருந்தனர். இந்நிலையில் அப்பர் போற்றிப் பாடிய சிவதலங்கள் 126 ஆகவும், சம்பந்தர் பாடிய தலங்கள் 219 ஆகவும் காணப்படுகின்றமை இயல்பானவையாம். எனவே இத்தலவரலாறுகள் கொண்டும் மாணிக்கவாசகர் காலம் உய்த்துணரத்தக்கதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்க வாசகர் குறிப்பிடும் ஆகமத்தின் காலம் யாது?

மகேந்திரமலைத்தொடர் ஒன்று தென்மேற்காகத் தென்னகத்தே அமைந்திருந்த தென்பதனை இராமாயணம் குறிப்பிடும். இதனோடு இன்னோர் மகேந்திரமலை தென்கடலில் குமரிமலையை அடுத்திருந்த தென்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. அதனால் மகேந்திரமலைக்கு வடக்கேயிருந்த பொதிகைமலை வடமலை என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. பழைய தமிழ்கெழு கூடல்களும், இம்மலைகளின் பெயர்களாலே மகேந்திரமலைச்சங்கம், பொதியமலைச்சங்கம் எனவும் அழைக்கப்பட்டிருந்தன. இனி ஈழத்திற்கு தெற்காகக் கடலின் நடுவே 400 காவத தூரத்திலிருந்த சூரபன்மனின் இருப்பிடமும் வீரமகேந்திரம் என்றே அழைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இந்த மலைகள், நகர்கள் அனைத்தும் தொடர்ந்து இடம் பெற்ற பூமி நடுக்கத்தினாலும், கடல் கோள்களினாலும் முற்றாகத் தாண்டு அடையாளங்களை இழந்து போனாலும், சிவனும், முருகனும் நடாத்திய திருவிளையாடல்கள் தொடர்ந்தும் நினைவு கூரப்பட்டிருந்தன.

மாணிக்கவாசகர் குறிப்பிடும் ஆகமங்களின் தோற்றமானது கடல்கோள்களுக்கு முற்பட்ட காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். அதனாலே முதலில் மகேந்திர மலையில் அருளப்பட்ட ஆகமத்தினையே மீண்டும் இறைவன் தோற்றுவித்தனன் என்பர். இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னுமாமலை மகேந்திர மதனிற்

சொன்னவாகமந் தோற்று வித்தருளியும்"

(கீர்த்தித்திருவகவல்-9-10)என்றும், பின்கடலில்வீசப்பட்ட ஆகமத்தினை மீண்டும் எடுத்து மகேந்திரமலையிலே இருந்து உணர்த்தியதனை,

கேவேடராகிக் கெளிறது படுத்து
மாவேட்டாகிய வாகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்ற வைம்முகங்களாபணித்தருளியும்(மு.கு .வரி 17 -20) என்றும் கூறுவதிலிருந்து, இறைவன் உயிர்களின் ஈடேற்றத்திற்காக உலகைப்படைக்கும் பொழுதே, அவற்றிற்கு வேண்டியப் அறநெறிகளைப் போதிக்கின்ற ஆகமங்களையும் மகேந்திரமலையிலிருந்து கூறியருளினர் என்பர். அதனாலே இறைவனை "மகேந்திரமலை மகேந்திர வெற்போன்" (மு.கு.வரி 100) "எம்பெருமான் சோதி மகேந்திரநாதன்" (திருவார்த்தை -33) "வேடுருவாகி மகேந்திரத்து மிகு குறை வானவர் வந்து தன்னைத் தேடவிருந்த சிவபெருமான்" ( மு.கு.வரி 13 -14) என்றெல்லாம் போற்றி வழிபட்டிருந்தனர். இத்தகைய பழம்பெரும் வரலாறுகளைத் தமிழில் கூறப்பட்ட ஆகமங்கள் கொண்டிருந்தன என்பதனை நாம் மாணிக்கவாசகர் மூலமே அறியமுடிகின்றது. இவருக்கு முற்பட வாழ்ந்த சீத்தலைச் சாத்தனார்,

ஆகம அளவை அறிவன் நூலால்
போக புவனம் உண்டு (மணிமேகலை காதை 27 வரி 43-44)

என்பதனால் ஆகமங்கள் துறவை மட்டுமன்றி, உயிர்கள் துன்ப இன்பங்களைத் துய்த்தனுபவிக்கவேண்டிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகங்களையும், புவனங்களையும் பற்றித் தெரிவிக்கும் நூல்கள் என்றனர். ஆனால் "கொங்குமண்டலம் உருவாகிய காலத்திற்கும் பிற்பட்டவரான" திருமூலர் தமிழகத்தில் ஏற்பட்ட புதிய இனப்பரம்பலினால் உருவாகிய தொண்டைமண்டலம் ஆகிய புதிய ஆட்சி மண்டலங்களுக்கேற்றவகையில் ஏற்பட்ட சமய பின்னணியைச் சுட்டுவர். இவர் தமிழில் இருந்த ஒன்பது ஆகமங்கள் பற்றியும், வடமொழி வேதங்கள் பற்றியும், "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன்நூல் (திருமந்திரம் 2358) என்றனரேயொழிய, இதன் தோற்றவரலாறுகளைக் குறிப்பிட்டாரில்லை. அதனோடு இவர் மாணிக்கவாசகரின் ஆகமங்களுக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கும். மாறாக வேதாந்த சித்தாந்த சமரசத்தினையே முன்வைப்பர். மற்று மாணிக்கவாசகர் குறிப்பிட்ட ஆகமங்களின் தொடக்க நிலை பற்றியோ, அல்லது "ஆகம மாகிநின் றண்ணிப்பார் தாழ் வாழ்க" எனப் போற்றப்பட்ட தமிழ் ஆகமங்களின் பெருமைபற்றியோ இவர் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் திருமூலர் குறிப்பிடும் வரலாறுகள், இவர் வடகையிலையில் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமபாதர் முதலான எழுவருடன் வேதாகமங்களை நந்திபெருமானிடம் கற்றிருந்தார் என்பதனால், இவர் ஆகமங்களுக்கு வடநாட்டு மரபுகளையே கூறுவர். இதனைத் தொடர்ந்து. "மண்ணின்மிசைத்திருமூலர் வாக்கினாற் றமிழ் வகுப்ப' எனும் புராணக் குறிப்புகளும் திருமூலர் வகுத்த ஆகமங்கள், மாணிக்கவாசகர் குறிப்பிட்ட தமிழக ஆகமவரலாற்றினின்றும் முற்றிலும் வேறுபட்ட, பிற்கால வரலாறுகளேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வடநாட்டு வேதங்கள் தமிழ்நாட்டிற்குள் செல்வாக்குப்பெற்ற சூழலில் மாணிக்கவாசகர் வாழ்ந்ததனால் இவரும், "வேத நான்கும் ஒலமுட்டுணங்குநின்னை" (திருச்சதகம் வரி 300) "பாடுவன நால்வேதம்" (திருச்சதகம்) "வேதமெய்ந்நூல் சொன்னவனே" (நீத்தல் விண்ணப்பம் வரி180) என வேதங்களைப் போற்றத்தவறவில்லை. ஆனால் வேதங்கள் சிறப்பித்துப்பாடிய இந்திரன், பிரம்மா, விஷ்ணு, ஆகிய முப்பத்து மூன்று தெய்வங்களைத் தென்னாட்டுச் சிவனுடன் ஒப்பிட்டாரில்லை. மாறாக

*எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்*
*மண்மிசை மால்பலர் மாண்டனர் காண்*

(திருத்தோணாக்கம் 35-36)

என இவர்களது பிறப்பு இறப்பு வட்டத்திற்குட்பட்ட நிலையையே சுட்டியிருந்தனர்.எனவே மாணிக்கவாசகர் குறிப்பிடும்ஆகமங்கள் தமிழகக் கடல்கோள்களுக்கு முற்பட்டவைஎன்பது உறுதியாம். அதனால் இவர் காலத்திற்குப் பின் வாழ்ந்த திரு மூலர் ஆகமங்கள் பற்றி இவர் ஏதும் அறிந்திருக்கவில்லையென்பதே நிறுவப்பட்ட உண்மையாகும்.

இனி, ஆகமங்கள் பற்றி நம்பி திருவிளையாடல் கூறும் பிற்கால வரலாறுகளும் அடிகள் குறிப்பிட்ட வரலாற்றினின்றும் முற்றிலும் வேறுபட்டதாம். அடிகள் மகேந்திர மலையில் தோற்றுவித்த ஆகமத்தினை மீண்டும் மகேந்திரமலையிலேயே ஐம்முகங்களாற் பணித்தனர் என்கையில் நம்பியோ வடநாட்டு மரபையொட்டி ஆகமங்களைக் கயிலையில் தோற்றுவித்து பின், கடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியெடுத்து உத்தரகோசமங்கையில் இறைவிக்கும், அங்கு தவம் கிடந்த 64 முனிவர்களுக்கும் உரைத்தனன் என்பது தமிழக சிவநெறி வரலாற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதொன்றாகும். எனவே திருமூலர் காலம் முதலாக ஆகமங்களுக்கு பல்வேறுபட்ட வரலாறுகள் உருவாகி இருக்கையில், மாணிக்கவாசகர் குறிப்பிட்ட செய்தியே ஆகமங்களின் பழைமையை உறுதிசெய்கின்றதெனலாம். அதனாலே சிவனை,

"தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி" என்று பரம்பொருளின் வியாபகத்தையும் வலியுறுத்தினர். மேலும் ஆகமப்பிரியன் எனத் தன்னை அடையாளப்படுத்திய பல்லவ மன்னன் இராஜசிம்மன் (கி.பி. 680-700) காலத்திலேதான் தமிழில் இருந்த ஆகமங்கள் வடமொழிப்படுத்தப்பட்டன எனத் தெரிகின்றது. (மேலும் விபரங்களுக்கு பார்க்க, ஆசிரியது சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும் 2ஆம் பதிப்பு பக்.40-49) எனவே இப்படியானதொரு நிலை தமிழ் ஆகமங்களுக்கு ஏற்படாத காலத்திலேயே மாணிக்கவாசகர் வாழ்ந்திருந்தார் என்பதற்கு ஆகமங்களின் கால ஆய்வுகளும் உறுதுணையாக அமைந்துள்ளன எனலாம்.

## மாணிக்கவாசகர் பாடல்கள் காலத்தால் முற்பட்ட நாட்டார் பாடல்களின் இயல்பு கொண்டவை

மாணிக்கவாசகர் பாடல்கள் சங்ககாலத்தையொட்டி உருவாகிய சிலப்பதிகார வரிப்பாடல்களைப் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து, எத்தகை முறையான தாளக் கோப்பில்லாமல் பழைய மோகனராகத்தில் பாடப்படுவதனாலும் இதன் பழைமை புலனாம். இவரது பொற்சுண்ணம் இடித்தல், தும்பியாடல், தெள்ளேணம் கொட்டல், சாழல், திருப்பூ வல்லி கொய்தல், உந்தி பறத்தல், தோள் நோக்கம், ஆடல், ஊசலாடல் என்பன பண்ணிசைக்கு முற்பட்ட நாட்டார் பாடல்களின் இயல்பு கொண்டவையாம். சம்பந்தர் தேவாரங்கள் இத்தகைய விளையாட்டுக்கள் மூலம் பாடியாடும் வழக்குகளைக் குறிப்பிடினும், புதிய பண்ணிசை, நடனம் ஆகிய வழக்குகளுடன் மேற்கொள்ளப்படும் கோவில் வழிபாடுகளின் வளர்ச்சி நிலைகளைக் கொண்டனவாம். அதனோடு அப்பரும், சம்பந்தரும் மன்னர்களைச் சமணத்திலிருந்து சைவம் பேணச்செய்து, மக்களிடமும் **பக்தி இயக்கத்தை இசை,** நடனங்களுடன் வளர்த்தவர்கள். எனவே மாணிக்க வாசகர் காலம் அவர் பாடல் இயல்புகள் கொண்டும் பழமையானவை என்பதே புனலாம்.

இவ்வாறு பலகோணங்களிலும் இவர் காலத்தை ஆராய்கையில், இவரது காலம் மறைமலை அடிகள் முதலானோர் கருதுவது போல் கி.பி 3ஆம் நூற்றாண்டு என்பதே புலனாம். ஆனால் இவரைக் கி.பி 9ஆம் நூற்றாண்டடிற்குப் பிற்பட்டவர் என்பதற்கு கே.எஸ். ஸ்ரீநிவாசபிள்ளை கூறும் வாதம் பேராசிரியர் கோவைக்கு உரைஎழுதவில்லை என்பதாகும். மா.இராசமாணிக்கனார் இறைவன் அடிகளை ஆட்கொண்ட உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறை, பெருங்கருணை முதலான தலங்கள் பிற்காலத்தவை என்பதனாலே தேவாராசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைக் குறிப்பிடவில்லையென்பர். இவர்களின் வாதங்கள் உண்மையற்றவை என்பதனை மேலே ஆராய்ந்து காட்டிய சான்றுகள் மூலம் உணரலாம்.

## சைவ உலகம் மாணிக்கவாசகரைக் கி.பி 3-9 ஆம் நூற்றாண்டுவரை ஒதுக்கியிருந்தது ஏன்?

மாணிக்கவாசகர் தானாகத் திருக்கோவையாரைப் பாடவில்லை. அது இறைவன்திருவிளையாடலினாலேதான் பாடப்பட்டதொன்றாகும்

"நாயினேனை நலமலி தில்லையுட்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகவென"

(கீர்த்தித்திருவகவர் வரி 126-217)

என இறைவன் தில்லைக்கு இவரை அழைத்திருந்தனர். பின் அங்கு சென்றிருந்த அவரைக் கொண்டு கோவையைப்பாட வைத்தார். அதனைத் தான்பாடவில்லை. இறைவனே தன்னுள் இருந்து பாடினார் என்பதனை

எனை நான் என்பதறியேன் பகல் இரவா வதும் அறியேன்
மனவாசகங் கடந்தான் எனை மத்தோன் மத்தன் ஆக்கி

(உயிர் உண்ணிப்பத்து 3)

நினைவித்துத் தனைனயென் னெஞ்சத் திருத்தம் பலத்து
நின்று புனைவித்த வீசன் (கோவை செய். 140)

என்று கூறியருளினர். திருப்பெருந்துறைப் புராணமும் மணிவாசகரைக் கோவைபாட வேண்டிய அந்தணர், அதனை எழுதி முடிந்ததும், புத்தகத்தைக் கட்டிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தார் என்ற மரபுவழிச் செய்தியினைப் பின்வருமாறு குறிப்பிடும்.

"மெய்த்தவ வாதவூரன் விளம்பிட எழுதும் இந்தப்
புத்தகம் மன்றுளாடல் புரிந்தவன் எழுத்தாம் என்று
முத்தியை உதவும் கோவை முடிவிடத் தெழுதிப்பின்னர்
சித்திர மலர்க்கையாலே திருந்தமைக் காப்பும் செய்தார்
வைத்த பின் பூசை செய்யும் அந்தணன் வந்து கண்டிப்
புத்தகம் இங்கு நண்ணும் புதுமை தெய்வீகமாம் என்று
சித்தம் அங்குருகி நின்று தில்லை உள்ளார்கட் கெல்லாம்
இத்திறம் கூறல் வேண்டும் என்று மன்றகன்று போந்து"

என்று குறிப்பிடும். இறைவன் ஆகமங்களையும், பின் அன்பினைந்திணை எனத்தொடங்கும் **இறையனாரகப்** பொருளையும் உயிர் போகங்களை அனுபவித்துப் பலாபலன்களை அடையவேண்டும் என்ற நோக்கிலே அறிவுறுத்தி, பின் விடுதலை நாட்டத்திற்கு இவையே துணைபுரிவன என்பதனையும் உணரவைத்திருந்தனர். இந்த வகையிலேதான் திருக்கோவையாரின் உட்கிடக்கை உயிராகிய தலைவி, இறைவனாகிய தலைவனைப் பலவிததுன்பங்களையும், சோதனைகளையும் படிப்படியாகக் கடந்து ஒன்று கூடி இன்புறுதலேயாம். இங்கு மெய்ஞானக் கருத்துக்களைச் சிற்றின்பத்தில் திளைத்திருக்கும் உயிர்கள் விரும்புவதில்லை. எனவே மக்கள் உலகியலில் விரும்பும் சிற்றின்பத்தைக்கொண்டு, பேரின்பத்தைக்கூறும் நூலே திருக்கோவையாராகும். கந்தபுராணத்திலும் களவுப் படலத்தில் வள்ளிக்கும் முருகனுக்கும் ஏற்பட்ட சிற்றின்ப வழியிலே பேரின்பம் அடையும் வழி உணர்த்தப்பட்டதாம். முதலில் உயிர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்போனபடி சிற்றின்பத்தில் திளைத்திருக்கையில் இறையாகிய பேரின்பத்தைத் துச்சமாகக் கருதி வினைகளைச் செய்கின்றன. இவ்வாறு செய்யும் வினைப்படியே அவற்றிற்கு உடல்கள் மாற்றி அமைத்து மீண்டும் உழன்று துய்க்க விட்டிருப்பவனும் இறைவனே. எனினும் பிறப்புவட்டத்தினிறுதியில் இவை சிற்றின்பத்தை வெறுத்து பேரின்பத்தையடைய முயல்கின்றன. எவ்வாறாயினும் இவ்விரு நிலைகளிலும் உயிர்களுக்கு இறைவனே பற்றுக்கோடானவன். இதனாலே,

வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பினது ஆகி
ஏறுஉடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுஉடை மங்கையும் தானும் வந்தருளி

என்பதனாலே உயிர்கள் உய்ய இறைவனும் போகியாகிக் காட்டினன் என்றனர். இக்கருத்துக்களை உட்கிடக்கையாகக் கொண்ட நூலாக திருக்கோவையார் இருந்தமையினால், தமிழக சைவசமய வரலாற்றில் மாணிக்கவாசகர் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே இருந்துள்ளார். இதனாலேதிருமுறைவைப்பில்திருவாசகம் எட்டாம் திருமுறையில் வைக்கப்பட்டிருந்தாலும், கோவை சேர்க்கப்பட்டிருக்கவில்லை. தற்பொழுது அதன் **பகுதியாக** இடம்பெற்றிருப்பினும், இந்நிலை எப்பொழுது? யாரால்? எக்காலத்தில் சேர்க்கப்பட்டதற்கான பதிவுகள் இல்லையென்றே தெரிகின்றது.

கோவைக்கு உரையெழுதிய பேராசிரியர் கோவையினுள் **ஆகமநூல் வழியில்** நுதலிய ஞானபோக நுண்பொருள் இருப்பினும், தான் உலகவழக்குப்பற்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறே இதன் நுண்பொருளைக் கல்லாடரும் எடுத்தியம்பியிருந்தார். இப்பின்னணியில் எழுந்த செய்யுள் ஒன்று, இவை யனைத்தினையும் கருத்திற்கொண்டு வேதநூலெனவும், ஆகமநூலெனவும், காமநூலெனவும், அளவைநூலெனவும், இலக்கண நூலெனவும், ஒருவர் தம்கருத்திற் கிணங்க அளவிடலாம் எனும்,

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகியராகமத்தி
காரணங்க காணென்பர் காமுகர் காமநன் நூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ணர் எழுத்தென்பரின்ப புலவோர்
சீரணங் காய சிற் றம்பலக் கோவையைச் செப்பிடனே

என்பதே இச்செய்யுளாகும். இக்கருத்தினடிப்படை யிலேயே குமரகுருபரரும் (17 ஆம் நூற்றாண்டு) சிதம்பரம் மணிக்கோவையில் (செய் 22)

ஐந்திணை யுறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமஞ்சான்ற ஞானப்பனுவல்" எனப் போற்றினர்.

ஆனால் நம்பியாண்டார் நம்பி (இவர் காலம் முதல் ஆதித்த சோழனுடனும் (கி.பி 870-907, முதலாம் இராசராசசோழனுடனும் (கி.பி 985-1016) தொடர்புபடுத்தும் குறிப்புகளால் குழப்பமுடையதாகும். இவரும் சைவசமய உண்மை நிலையைப் பின்வருமாறு விபரிப்பர்.

வருவா சகத்தின் முற்றுமுணர்ந் தோனை வண்தில்லை
மன்னனைத்
திருவாத வூர்ச்சி பாத்தியன் செய்திருச் சிற்றம்ப லப்
பொருளார்தருதிருக் கோவைகன் டேயு மற்றம் பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவிபாடி சிரிப்பரே

(கோவில் திருப்பண்ணியர் விருத்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனால், திருக்கோவைநூலில் "இவைதிருவாதவூரன் பாட அழகிய திருச்சிற்றம்பலமுடைவான் எழுதியவை" எனும் குறிப்புடன் தில்லையிலேதான் இருந்தவிடத்தும் அதனை ஞானநூலாக ஏற்றுக்கொள்ளும் நிலையேற்படாது இருந்ததினாலே மாணிக்கவாசகர்இலைமறைகாய்போல் வைக்கப்பட்டிருந்தார்.

கோவையை ஞானநூலென அடையாளப் படுத்திய கல்லாடமும் திருமுறையில் வைக்கப்பட வில்லையென்பதாலும், திருநாவுக்கரசர் குறிப்புகள் கொண்டும், நம்பியாண்டார் குறிப்பிட்ட உண்மை நிலைகளினைக் கவனத்திற் கொண்டும் இவர் காலத்தால் முற்பட்டவர் என்பது உறுதியாம். மாணிக்கவாசகர் காலத்திற்குப் பிற்பட எழுந்த சிவஞானசித்தியாரிலும்,

"ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டு
காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லை"
"போகியாயிருந் துயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோமுத்தி உதவுகல லதுவுமோரார்"

என்பதனால், காலந்தாழ்த்தியாவது கோவையின் கருப்பொருளை சைவஉலகம் புரிந்து கொண்டிருக்கலாம் எனத் தெரிகின்றது.

## பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர்கள் கால அடிப்படையில் தொகுத்தாரில்லை

இந்த ஆய்விற்கும், மாணிக்கவாசகர் காலத்திற்கும் தொடர்புகள் இல்லாவிடினும், பொதுவாகத் திருமுறை களையோ அல்லது பழைய நாயன்மார்களையோ கால அடிப்படையில் வைக்கும் பணியானது மேற்கொள்ளப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கவில்லையென்ற உண்மையை இந்த ஆய்வு புலனாக்கும். குறிப்பாகச் சில நாயன்மார்களின் அருட்பாடல்கள், கல்லாடம், ஞானாமிர்தம் (வாகீசரது) போன்றவை திருமுறை வகுப்பிலோ அல்லது சைவசித்தாந்த நூற்தொகுப்பிலோகூட இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. தேவாரசிரியர்களிற் காலத்தால் முற்பட்டவர் திருநாவுக்கரசர் ஆவர். ஆனால் திருமுறை வைப்பில் சம்பந்தரே முதலிடத்தில் வைக்கப்பட்டுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாரின் (கி.பி 8ஆம் நூற்றாண்டினர்) அடங்கன் முறை எனப்படும் தேவாரங்கள் ஏழாந்திரு முறையில் வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே திருவாசகம் எட்டாம் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. பொதுவாக திருவாதவூரரைத் தேவாராசிரியர் பின்னரே வைக்கும் மரபு இருந்து வந்துள்ளது.

பட்டினத்தடிகளும்,

"வித்தகப்பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப்பிள்ளையும்
(திருவிடை மருதூர் மும்மணிக்கோவை)

என மணிவாசகரை நான்காம் இடத்திலே வைத்தனர்.

நம்பியாண்டார் நம்பி, ஆதித்தசோழன் (கி.பி 870-907) காலத்தவர் என்றும், திருமுறைகளைக் கண்ட வேந்தன் இவனே என்றும், இவன் திருப்பதிகங்களைக் கோவில்களில் படிக்க நிவந்தம் அளித்தான் என்றும் சிலவரலாற்றுக் குறிப்புகள் உள. இதன்படி முதல் ஆதித்தசோழன் கி.பி 873இல் திரு எறும்பியூரிலும், 876ஆம் ஆண்டில் பழுவூரிலும், பின் முதற் பராந்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் கி.பி 910இல்திருவாவடுதுறையிலும், 911இல் அல்லூரிலும், 944இல் திருத்தவத்துறையிலும், பின் ஆண்ட உத்தம சோழன் 977இல் கோணேரிராசபுரமென்னும் திருநல்லத்திலும், 984இல் அந்துவநல்லூரிலும் நிவந்தங்கள் வழங்கியமைக்காகிய பதிவுகள் உள. ஆனால் வேறோர் குறிப்பின்படி முதலாம் இராசராசன் (கி.பி 985-1016) நம்பியாண்டார் நம்பியிடம் "மூவர் தமிழ்த்தொண்டர் செய்தி பூதலத்தில் விளங்கவெனப் போற்றி" என்று வேண்டியதனால், நம்பியும் தந்திமுகனை "மூவர் செந்தமிழ்களிருந்தவிட மன்பருள்ளோர் தெரிவிக்கும் படி வேண்டி, ஏழு திருமுறைகளைத் தொகுத்தார் என்று தெரிகின்றது. ஆனால் உமாபதி சிவாசாரியாரே (கி.பி 1313) தமது திருமுறைகண்ட புராணத்தில்,

"ஆகவளர் திருமுறையே முருட்டிருவாசகமொன்றும்" என திருவாசகத்தை எட்டாம் திருமுறையாக வகுத்த முறைமை பற்றிக் குறிப்பிடுவர். இவரும் தமது கோயிற்புராணத்தில்,

பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்து பெருந்துறைக்கடலுண்டு
ஆசிலெழி றடித்தயர வஞ்செழுத்தா லதிர்ந்தெழுந்து

தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான்

வாசகமா மாணிக்க மழைபொழி மா முகில் போற்றி

எனத் தேவார ஆசிரியர்களுக்குப் பின்னரே வைத்துப் போற்றினர். இவ்வாறு தேவார ஆசிரியர் எவருடனும் தொடர்புகாட்டாது, இவரை தனி ஒரு மாணிக்கமாகக் கல்லாடரே அடையாளப்படுத்தியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காலமே காரணம் எனலாம். அதனோடு திருச்சிற்றம்பலக்கோவையின் கருவைத் தவறாகப் புரிந்து கொணடு ஒதுக்கியமை, மற்று வடநாட்டு வேதக் கோட்பாடுகளை அடிகள் உதாசீனம் செய்தமை போன்ற காரணங்களும் உள்ளடக்கப்படவேண்டியனவாம்.

## தேவாரங்களைக் காட்டிலும் உள்ளங்களை உருகவைத்த திருவாசகத்தின் பெருமைகள்

காலத்தால் முற்பட்ட திருமூலர் "பாடும் திருமுறை பார்ப்பணி பாடங்கள்" (திருமந்திரம் 1043) என எத்திருமுறைகளைக் குறிப்பிட்டார் என்று அறிவதற்கில்லை. ஆனால் நந்திவர்மபல்லவனின் (கி.பி 750) திருவல்லம் கல்வெட்டுத்' திருப்பதிகம் பாடுவார் உள்ளிட்ட பலபணிகள் செய்வார்" என்பதனால் கோவில்களில் ஆரம்பகாலம் முதலே இறைவனை நினைந்து உருகிப்பாடித் தொண்டு புரிந்தோர் இருந்து வந்துள்ளமை புலனாம். பின்னர் வீரராசேந்திரன் (கி.பி 1063 - 1069) காலம் முதலாக் கோவில்களில் திருவெம்பாவை, திருச்சாழல் என்பன ஓதப்படலாயின என்ற குறிப்புகள் உள. இவனுக்குப்பின் ஆண்ட முதலாம் குலோத்துங்கனின் மகன் விக்கிரமசோழன் (கி.பி 118 - 1136) தில்லையில் திருச்சாழற் பதிகம் பாடுவதற்கும், திருவானைக் கோவிலுக்குமாக நிலங்கள் விட்டிருந்தான்.

இக்காலத்தின் பின்னரே இவர் திருமேனிகள் கோவில்களில் இடம் பெறலாயின. திருப்பெருந்துறையில் இவர் உபதேசம் பெற்றதனால், இக்கோவிலின் உள்ளேயும், வெளியேயும் இவர் திருவுருவங்களே உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் உபதேசம் பெற்ற குருந்த மரமும் இக்கோவிலின் பின்புறத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தலத்தில் நந்திதேவரும், ஸ்ரீ சண்டேசுவரர் வழிபாடுகளும் இல்லை. சிவன் - சக்தி இருவரும் அருவத்திருமேனி வடிவிலே எழுந்தருளியிருப்பர். அதனாலே சிவபுரம், ஆவுடையார் கோவிலெனும் பெயர்களும் இக்கோவிலுக்குண்டு. திருப்பெருந்துறைப் புராணம் பிற்காலத்தில் உருவாகியதனால், அங்கு பிற்காலத்தில் உருவாகிய சைவ, வேதாகம சந்நியாசிகள் மடங்கள் பற்றியும் விபரிக்கும். திருப்பெருந்துறையடைந்த படலத்தில் அடிகளைத் திருநாவுக்கரசருக்குப் பிற்பட்டவராகவே குறிப்பிடும்.

பதினோராம் நூற்றாண்டில் சைவ சமய உலகிற்கு எளிமையாகவும், உள்ளங்களில் நிரந்தரமாகக் குடி கொள்ளவைக்கும் ஆன்மீக சிந்தனைகளைப் பாடியவரான சமய ஔவை முதலாம் குலோத்துங்கசோழன் (கி.பி 1070-1120) காலத்தவராவர். இவரே கோவை - திருவாசகம் இரண்டும் சைவ இலக்கியங்களின் அடிநாதமே எனச் சைவ உலகிற்கு எடுத்துரைத்தார்.

தேவர்குறளும் திருநான்மறையு முடிவும்
மூவர் தமிழும் மணிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர். (நல்வழி-செய்.40)

என மணிவாசகரைப் பெருமைப்படுத்தும் வகையிலே இவ்வெண்பாவைப் பாடியிருந்தார்.

இவரைத் தொடர்ந்து காலத்தால் முற்பட்ட சைவசித்தாந்த ஆசிரியரானவரும் (11ஆம், 12ஆம் நூற்றாண்டினர்) திருக்களிற்றுப் படியாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவருமான உய்யவந்த தேவநாயனார் மணிவாசகரின் வாயில் மலர்ந்தவை உயிர்களைக் கருவாதையிலிருந்து காக்கவல்லன என்பதனை அளவிட்டிருந்தார். இதனை,

பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன் (செய் 73)

என்று சொல்லி அருளினார்.

சிவப்பிரகாச சுவாமிகளும் (18ஆம் நூற்றாண்டு) திருவாசகத்தின் பெருமையை

"வேதம் ஓதி விழிநீர் பெருக்கி நெஞ்சம்
நெக்குருகி நிற்பவர் காண்கிலம்
திருவாசகம் இங்கொருக்காலோதில்
கருங்கல் மனமும் கரையும்

(நால்வர் நான் மணி மாலை செய்)

என்று அனுபவித்திருந்தனர். மேலும் ஈழத்தைச் சேர்ந்த காசிவாசி செந்திநாதையரும், துகளறு போதத்திற்கு உரை வகுத்த அச்சுவேலியூர் ஈசானசிவன் (திக்கம் செல்லையா) ஆகியோரும் கோவைக்கும், துகளறு போதத்திற்கும் வேறுபாடுகண்டிலர். மேலும் இலக்கணக்கொத்துக்காரரும் கோவைகளுட் சிறந்தது திருக்கோவையார் என்பர். இதனைப்,

"பல்காற் பழகினும் தெரியா வுளவேற்
றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றிலும் முழங்கும்" என்பதனால்,

"அருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவையென மொழிப' எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கூற்றும் சீர்தூக்கத் தக்கதாம். இனி, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரான இராமலிங்க அடிகள்,

"வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாறினிலே"
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை
கலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாமல் இனிப்பதுவே

எனத் தான் இவரது பாடல்களைக் கலந்து பாடுகையில் தித்திக்கின்றன எனக்கூறி இவரையனுபவித்திருந்தார்.

இவருடைய சிவபுராணம் சைவசித்தாந்தத்தின் மூலக்கருவினை உள்ளடக்கியதாகும் உயிர் சார்ந்ததன் வண்ணமாய் அதுவதுவாய் ஆகும் இயல்புடையது. இவ்வாறு உலகியலில் தான் முதலில் அலைப்புண்டு வாழ்ந்தநிலையை,

"ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப் புலனால்
அலைப்புண்டேனை" (நீத்தல் விண்ணப்பம் 21)
எறும்பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புண்டலந்த
வெறுந்தமியேனை (மு.கு.வரி.26)

என்று கூறிய இவர், பின் இறைவனைச் சிக்கெனப் பிடித்த நிலையில் பாடிய இறையனுபவங்களே சிவபுராணம் ஆகும். இந்நிலையில் சிற்றின்பங்கள் முற்றாக அறுந்துவிட்ட நிலையில், பேரின்பத்தின் பெருமையை எளிதாகவும், சுருக்கமாகவும் வடித்து, பிறரையும் ஆற்றுப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு இவரின் இறையனுபவங்களை நாம் பரக்கக் கண்டாலும், திருவாசகமே மக்கள் மனங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகவைப்பனவாம். திருக்கோவையார் இன்னமும் இலைமறைகாயாகவே இருந்து வருகின்றது. எனினும் திருக்கோவையாருக்கு சரசுவதி மகால் நூல் நிலையத்தில் தஞ்சாவூர் ஏட்டுச்சுவடிகளுக்குப் பதவுரை ஒன்று இருப்பதாகச் சி.எம்.ராமச்சந்திரசெட்டியார் குறிப்பிடுவர். (சோழன்பூர்வபட்டயம்) இதுதவிர இதனைப் பேராசிரியர் உரையுடன் திருப்பனந்தார் ஆதினம் (1960) வெளியீடு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் திருக்கோவையார் க.கி நடராஜபிள்ளையால் சி.கணேசையர் முகவுரையுடன் 1942 (யாழ்ப்பாணம்) பதிக்கப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாம். இக்கோவையின் கண் உள்ள குறுந்தொகை, அகநானூறு முதலான சங்க நூற்கருத்துக்கள் சிலவற்றைக் கணேசையர் (பக். 6-8) எடுத்துக்காட்டுவர். பேராசிரியர் உரையை அச்சிட்டவர் ஈழத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்ற குறிப்புமுளது. மேலும் இந்தக்கோவையின் பெருமையை உணர்த்துதற்கு சங்க நூற்பயிற்சி வேண்டும் என்பதும் பதிப்பாசிரியர் கருத்தாகும். இதனையே கோவை 5 'ஒண்டீந் தமிழின் துறை' எனக் கூறியிருந்தது. எனவே மீண்டும் இச்செய்திகள் மாணிக்க வாசகரைச் சங்கமருவிய காலத்திற்கு இட்டுச்செல்கின்றன எனக் கருதமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் அனுபவித்த மாணிக்கவாசகர் தெய்வீகப் பாடல்கள்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு னக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே
பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந்துறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுக்கம் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்தன்
கண்ணினைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள்ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலதமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

நானேதோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவெந் தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில்கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன் ஓர் கைம் மாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. மறைமலையடிகள், திருவாசகம், கழகவெளியீடு, 1968
2. மறைமலையடிகள், மாணிக்கவாசகர்மாட்சி, கழகவெளியீடு, 1935
3. இறையனார் களவியலுரை, நக்கீரனார், சைவசித்தாந்த நூற்பதிப்பகம், 1953
4. சு.அ.இராமசாமி, கல்லாடம் உரைநடை, 1944
5. ஆர்.பஞ்சநாதம்பிள்ளை, திருச்சிராமலைக் கோயில் வரலாறு, 1944.
6. ம.க.வேற்பிள்ளை, திருவாதவூரடிகள் புராண உரை, 1931
7. க.குருமூர்த்திஐயர், திருவாதவூரர் சரித்திரம்
8. க.சு.நவநீதகிருஷ்ணபாரதியார், ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ஆராய்ச்சிப்பேருரை, பத்மா பதிப்பகம், மாவிட்டபுரம் 1954.
9. கா.அப்பாத்துரை, தென்னாட்டுப்போர்க்களங்கள், 1957
10. கா.அப்பாத்துரை - குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு11. அ.சிதம்பரனார், முச்சங்கங்களின் வரலாறு, கழகவெளியீடு, 1918
12. த.சி.கந்தையாபிள்ளை, முச்சங்கம் 1947
13. பேராசிரியர்மார், தமிழக வரலாறு, பாண்டியர் காலம்
14. க.கி.நடராஜபிள்ளை பதிப்பித்த திருக்கோவையார், யாழ்ப்பாணம். 1942.
15. உ.வே.சாமிநாதையர், திருப்பெருந்துறைப் புராணம், 1913
16. கா.கோவிந்தன், தமிழகத்தில் கோசர்கள், சென்னை, 1960.
17. கடவுள் மாமுனிவர் திருவாதவூரர்புராணம், கழகவெளியீடு, 1982.
19. சு.அருளம்பலனார், திருவாசக ஆராய்ச்சி உரை, 1973.
20. கா.சுப்பிரமணியபிள்ளை உரை, திருவாசகம், 1933.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. திருப்பனந்தாள் ஆதீனம், திருக்கோவையார், 1952.
22. பரஞ்சோதிமுனிவர், திருவிளையாடற்புராணம், 1951.
23. திருத்தொண்டர் மாக்கதை (பெரியபுராணம்) கழகவெளியீடு, 1977
24. உமாபதிசிவாசாரியார், திருமுறைகண்டபுராணம்
25. பொ.வே.சோமசுந்தரனார், திருக்கோவையார் பழைய உரையும் புதியவிளக்கமும், கழகம் 1979.
26. பு.சி.புன்னைவளநாதமுதலியார், திருவாதவூரடிகள் புராணம்,
27. கா.சுப்பிரமணியபிள்ளை, இலக்கிய வரலாறு பகுதி - II, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1958.
28. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (9ஆம் நூற்றாண்டு) 1975.
29. மு.அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ்ப்புலவா வரலாறு, நூற்றாண்டு முறை 1972.
30. ரி.வி சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு
31. சிவராமமூர்த்தி, கல்வெட்டுக்களும் எழுத்துக்களும், 1980.
32. கே.எஸ். ஸ்ரீநிவாசபிள்ளை, தமிழ் வரலாறு
33. ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும் பேரும்
34. Sir.T.W.Holderness, Peoples and Problems of India
35. Scott Elliott, The Lost Lemuria.
36. கழகவெளியீடு, சிவப்பதிகள் வரலாறு, 1981
37. வடலூர் இராமலிங்க அடிகள், மனுமுறைகண்ட வாசகம் கழக வெளியீடு, 1981.
38. ர.சுப்புரெட்டியார், சோழநாட்டுத்திருப்பதிகள், 1981


(முற்குறிப்பிட்ட அனைத்து நூல்களையும் கொழும்புத் தமிழ்ச் சங்க நூல் நிலையத்தில் ஆசிரியர் ஆய்வு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு



தென்பிரான்சின் நியாக்ஸ் குகை ஓவியம் p.127
Source : WHSMITH'S Prehistoric life Encyciopedia




ஆபிரிக்காவின் நமிபியா குகை ஓவியம்
Source : Dr.Ewan Mcleish, The Spread of Deserts, Wayland


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவுஸ்திரேலியா பழங்குடிகளின் வரலாற்றுப் பதிவுகள்
Source : People & Place in Peril Deserts by Martin Jenkins.
p. 20-21 Cherrytree Books 1995.

நன்றி : மறவன்புலவு
சச்சிதானந்தன்,
காந்தளக தேசப்படம்,
செம்மைப்பதிப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Source : WHSMIT'S Edition.
Rainbow Prehistoric Life
Encyclopedia, 1984



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Source : WHSMITH REPRINTED. RAINBOW Prehistoric Life Encydopedia, 1984 p.13,89



Source : Deserts People & Place in Peril by Cherrytree Books. pp. 20-21, 1995.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்நூலில்......

தமிழகக் கால ஆய்வுகள் சற்றுக் கடின மானவையென்று, ஆசிரியர் அறிந்திருந் தும், மாணிக்கவாசகர் குறிப்பிடும் அகச் சான்றுகள் கொண்டு, இவர் குறிப்பிடும் தமிழக அரசியற் பின்னணிகள் காலத்தால் முற்பட்டவை என்பதனை ஆராய்ந்து காட்டியிருக்கின்றார். எனினும் இறைவ னோடு வாழ்ந்து, பாடியுருகியிருந்த இவரது காலம் ஏன்? சிக்கலாயிற்று என்பதற்கான காரணங்களும் ஆராயப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் மீண்டும் பிறப்பெடுத்துப் பாடி, உருகி இறைவனை மகிழ்விக்க மாட்டாரா? என்பதும் இவருள்ளத்தின் துடிப்பாகும்.

"அணியு மமிழ்துமென் னாவுயு மாயவன்
றில்லைச் சிந்தாமணி"

(கோவை 5)

"நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்
திருத்தம்பலத்து நின்று புனைவித்த வீசன்"

(கோவை 140)

இத்தகைய கோவையின் மறுபக்கத்தினை அறிந்துகொள்ள, இந்நூல் ஒரு வழிநூல். மனித வாழ்வியலின் இருபக்கங்களையும் பேசிடும் இந்நூல்.

- பதிப்பாசிரியர் -

ISBN 955441860-4

Harikanan (Pvt.) Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org